பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 02 வெள்ளிக்கிழமை (15.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :140

# சொல்ஹெய்ம் அடுத்த வாரம் வருகிறார்

# வன்னியில் புலிகளுடன் முக்கிய சந்திப்பு

## கிழக்குப் பகுதிக்கும் விஜயம்

கிளிநொச்சி, ஏப்ரல் 15

ஐரோப்பிய நாடுகளில் நீண்ட விஜயத்தை முடித்துக்கொண்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வன்னிக்குத்திரும்பவுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை நோர்வேயின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் அடுத்த வாரம் சந்திக் கவுள்ளார்.

எதிர்வரும் திங்களன்று கொழும்புக்கு வருகை தரவுள்ள எரிக் சொல்ஹெய்ம் மறுநாள் வன்னிக்குச் சென்று தமிழ்ச்செல்வனைச் சந்திப்பார் என்று தெரியவருகிறது.

சமகால அரசியல் மற்றும் களநிலைமை கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப் பாடு பெரும்பாலும் புதுவருடப்பிறப்புக்குப் பின் னரே தெரியவரும் என்று எதிர்பார்க்கப்பட்ட பின்னணியில் சொல்ஹெய்முடன் அடுத்த வாரம் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ள இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் பெறுவதாக அரசியல் வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை மற்றும் ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டு மானத்துக்கான பொதுக்கட்டமைப்பு ஆகிய விட யங்கள் முடிவு எட்டாமல் தொடரும் இழுபறி. கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் திட்டமிட்டு நடத்தப்படும் தாக்குதல்களால் எழுந் துள்ள கொந்தளிப்பான சூழ்நிலை ஆகிய விட யங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் சில விடயங்களைத் தெட்டத்தெளிவாக எடுத்துரைக்க

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஜூன் 6 இல் ஆரம்பம்

கொழும்பு. ஏப்.15

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறும் எனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித் துள்ளார். எவ்வித காரணங்களுக்காகவும் பரீட்சை ஒத்திவைக்கப்படமாட்டாது என்றும் அவர் கூறினார்.

உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப்படும் எனப் பரவியுள்ள செய்திகளில் எவ்வித உண் மையும் இல்லை. பரீட்சைக்கான தற்காலிக அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. ஜூன் 6 ஆம் திகதி முதல் ஜூலை முதலாம் திகதி வரை பரீட்சை நடைபெறும் என்று பரீட்சை ஆணை யாளர் தெரிவித்ததாக இணையத்தளம் ஒன்று நேற்றிரவு செய்தி வெளியிட்டிருந்தது. (எ)

## புத்தாண்டு சோபிக்கவில்லை அமைதியாகக் கழிந்தது

யாழ்ப்பாணம்.ஏப்.15

குடாநாட்டில் நேற்றுப் புதுவருட தினக் கொண் டாட்டங்கள் அமைதியான முறையில் இடம்பெற் றன.

நேற்றுமுன்தினம் இரவு 10.17 மணிக்குப் பிறந்த பார்த்திப ஆண்டை மக்கள் ஆவலுடன் வரவேற்றனர்.

கடந்த வருடங்களைப் போலன்றி இம்முறை புதுவருடக் கொண்டாட்டங்கள் அவ்வளவாகச் சோபிக்கவில்லை.

வழமையான ஆரவாரம் எதுவும் காணப் படவில்லை. இந்துக்கள் ஆலய வழிபாடுகளி லும் சமயப் பிரார்த்தனைகளிலும் ஈடுபட்ட னர். நண்பர்கள், உறவினர்கள் வீடுகளுக்குச் சென்று புத்தாண்டு வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டதுடன், உணவுப் பண்டங்களையும் பரிமாறிக்கொண்டனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### நேற்றைய புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது

## யாழ்.நகரில் சினிமா பாணியில் கடைக்குள் புகுந்து தாக்குதல்

யாழ்ப்பாணம்.ஏப்.15

யாழ்.நகரில் ஆஸ்பத்திரி வீதியில் அமைந் துள்ள ஒலிப்பதிவு கூடம் ஒன்றுக்குள் நேற்று தடிகள், பொல்லுகளுடன் புகுந்த கும்பல் ஒன்று அங்கிருந்த பொருள்களை அடித்துச்சேதப் படுத்தியது.

சினிமாத் திரைப்படங்களில் வரும் அடிதடிக் காட்சிகளைப் போன்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தினால் அந்தப் பகுதியில் பெரும் பர பரப்பு ஏற்பட்டது.

இளைஞர் ஒருவரைத் துரத்திவந்த கும் பல் ஒன்றே இத்தாக்குதலை நடத்தியிருக்கின் றது. வீதியில் துரத்தி வரப்பட்ட பிரஸ்தாப இளை

(14ஆம் பக்கம் பார்க்க)

### விபத்தில் பாடசாலை மாணவன் மரணம்

## அதிரடிப்படைக்கு எதிராக அம்பாறையில் மக்கள் சீற்றம்

காரைதீவு.ஏப்.15

அம்பாறை மாவட்டத்தில் மகா ஓயாவில் நேற்றுமுன்தினம் மாலை பதினான்கு வய தான பாடசாலை மாணவன் ஒருவன் அதிரடிப் படை வாகனம் மோதி உயிரிழந்த சம்ப வத்தையடுத்து. அங்குகூடிய பொதுமக்கள் படை வாகனத்தைத் தீயிட்டுக் கொழுத்தினர் அங்கிருந்த அதிரடிப்படை முகாமையும் தாக் கினர்.

முகாமை முற்றுகையிட்ட மக்கள் நேற்றுக் காலை வரை அங்கு நிலைகொண்டிருந்தனர்.

இந்தச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த சுயாதீன விசாரணைக்குழு ஒன்றை அமைக்கும்

(14ஆம் பக்கம் பார்க்க)

### தெற்கில் சுனாமிப் பாதிப்புக்கு

## அரச உதவி கிட்டவில்லையென ரணிலிடம் மக்கள் முறைப்பாடு

கொழும்பு.ஏப்.15

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக் கப்பட்ட தென்மாகாண மக்கள் தங்களுக்கு அரச உதவிகள் எதுவும் கிட்டவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவரிடம் முறையிட்டிருக்கின் றனர்.

தென்மாகாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அப்பகுதி மக்கள் நேரில் இந்த முறைப்பாட்டைச் செய்தனர்.

மீள் குடியமர்வுக்காக வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது என்றும் தற்காலிக குடியிருப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்றும் அப்பகுதி மக்கள் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் இரு பொலீஸார் உயிரிழப்பு

கொழும்பு.ஏப்.15

அவிசாவளையில் தலத்துவாறு என்னும் இடத்தில் நேற்றுமுன்தினம் இரவு பொலீஸார் பயணம் செய்த மோட்டார்சைக்கிளும் மற் றொரு மோட்டார்சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இந்தச் சம்பவத்தில் மோட் டார்சைக்கிளில் சென்ற இருபொலீஸார் உயி ரிழந்தனர். மோட்டார்சைக்கிள் பலத்த சேதத் துக்குள்ளானது. (ஐ-3)

## பொலீஸ் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம்

17 பொலீஸ் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள தாகப் பொலீஸ்மா அதிபர் கூறினார் என்று இணை யத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இவர்களில் ஐந்து பேர் ஒழுக்கவிசாரணைகளின் பின்னரும் ஏனையோர் தரப்படுத்தலுக்கு ஏற்பவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் - அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட் டுள்ளது. (எ)

# சேது சமுத்திரத் திட்டத்துக்கான முன்னேற்பாடுகள் யாவும் பூர்த்தி!

### இந்திய மத்திய அமைச்சர் தகவல்

புதுடில்லி.ஏப்.15

சேது சமுத்திரத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக் கைகள் பெரும்பாலும் பூர்த்தியடைந்துவிட்டன.

இந்திய மத்திய அரசின் அமைச்சரவை யிடம் இருந்து இத்திட்டத்துக்கு விரைவில் அனுமதி கிடைக்கும் சாத்தியம் இருக்கிறது.

அனுமதி கிடைத்ததும் மேற்படி திட்டம் தாமத மின்றி நடைமுறைப்படுத்தப்படும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இந்திய மத்திய அரசின் கப்பல் மற்றும் தரைவழிப் போக்குவரத்து அமைச்சர் ரி.ஆர்.பாலு.

இதுதொடர்பாக நேற்றிரவு அவர் பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவித்த தாவது:-

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்து வதால் மீனவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப் புகளை ஈடுசெய்வதற்கு 60 கோடி ரூபா ஒதுக் கப்பட்டுள்ளது.

இந்த சேது சமுத்திரத்திட்டத்திற்கும் சுனாமிக் கும் இடையில் ஏதேனும் தொடர்பு இருக்கிறதா என்பதைப் பல விஞ்ஞானிகள் மூலமாக ஆராய்ந் துள்ளோம்.

சுனாமி ஏற்பட்டால் கூட சேது சமுத்திரக் கால்வாய்க்குப் பாதிப்பு ஏற்படாது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, இலங்கை அரசின் தூதுக் குழு ஒன்றுடன் அண்மையில் பேச்சு நடத்தியுள் ளோம்.

இந்தத் திட்டத்தின் நன்மைகளை நாங்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பதிவாளரின் பெறுபேற்று அறிக்கையுடன் ஆசிரிய நியமனத்துக்கு விண்ணப்பிக்கலாம்

திருகோணமலை.ஏப்.15

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி. பண் பாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள பாடசாலைக ளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விண் ணப்பிக்கும் பட்டதாரிகள் விண்ணப்ப முடிவுதிகதி யன்று பட்டச்சான்றிதழைப் பெற்றிருக்கவேண் டியது அவசியம் இல்லை என்றும் -

விண்ணப்ப முடிவு திகதியான எதிர்வரும் 21ஆம் திகதியன்று, பல்கலைக்கழகப் பதிவாள ரால் வழங்கப்படும் பெறுபேறு பற்றிய அறிக்கை யைப் பெற்றிருந்தால் மட்டும் போதும் என்றும் -

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் வே.பொ.பால

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நேற்று இடம்பெற்ற அரியாலை 86ஆவது சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. இசை அசைவு நிகழ்வு இடம்பெறுவதையும், வினோத ஆடை நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பகீரதன்)

# சுதேசிய திருநாட் கொண்டாட்டம் அரியாலையில் சிறப்புற நடந்தது

யாழ்ப்பாணம்,ஏப்.15

அரியாலையில் 86ஆவது சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவின் இறுதிநாள் விளையாட்டு விழா, கலை விழா என்பன புத்தாண்டுத் தினமான நேற்று அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்திலும், காசிப்பிள்ளை அரங்கிலும் மிகவும் கோலாகலமாக நடைபெற்றன.

விழாத்தலைவர் க.மயில்வாகனம் தலைமையில் பிற்பகல் 2.30 மணிக்கு விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக பொறியியலாளர் சு.கமலநாதனும், சிறப்புவிருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளையும் கலந்துகொண்டனர்.

முதலில் அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து அரியாலை வீரர்களால் சுதேசியத் தீபம் எடுத்துவரப்பட்டு ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றல், சுதேசியக் கொடியேற்றல், சுதேசிய கீதம் இசைத்தல் என்பன இடம்பெற்றன. தொடர்ந்து பிரதமவிருந்தினரால் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஓட்ட நிகழ்வுகள், தலையணைச் சண்டை, வழுக்குமரம் ஏறுதல், எலி ஓட்டம், சிம்மாசன ஓட்டம், உப்பு ஓட்டம், பாலர் ஓட்டம், வேக நடை, அஞ்சல் ஓட்டம், கயிறிழுத்தல், வினோத உடை, இசை அசைவு ஆகிய நிகழ்வுகள் நேற்றைய போட்டிகளில் இடம்பெற்றன. தொடர்ந்து பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் தலைமை உரை, பிரதமவிருந்தினர் உரை, சிறப்புவிருந்தினர் உரை என்பன இடம்பெற்றன.

பரிசில் வழங்கலைத் தொடர்ந்து இடம்பெற்ற நன்றியுரையுடன் விளையாட்டு நிகழ்வுகள் நிறைவடைந்தன.

கலை நிகழ்வுகள் இரவு 7 மணிக்கு ஆரம்பமாகின.

விழாத்தலைவரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். கமநல சேவைகள் திணைக்கள தலைமைப்பீட பெரும்பாக உத்தியோகத்தர் ச.உருத்திரேஸ்வரனும் சிறப்புவிருந்தினராக முன்னாள் கல்விப் பணிப்பாளர் கோ.சி.வேலாயுதமும கலந்து கொண்டனர்.

தலைமையுரை, ஆசியுரை என்பவற்றைத் தொடர்ந்து பிரதமவிருந்தினர் உரை, சிறப்புவிருந்தினர் உரை என்பன இடம்பெற்றது.

அரியாலை 86ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு பிரமாண்டமாக தயாரிக்கப்பட்ட 'தாய்த் திருநாடு' என்ற வரலாற்று நாடகம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து நட்சத்திரப் பாடகர் தெரிவுப்போட்டி, சுதேசிய இசைமாலைப் பாட்டுப் போட்டி என்பன இடம்பெற்றன.

இந்நிகழ்வுகள் அனைத்தையும் கண்டுகளிக்க ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்தனர். (த-12)

# மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையை யாழ்.சுகாதாரப் பணிமனை பொறுப்பேற்கும்

குருநகர்,ஏப்.15

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையை எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் பொறுப்பேற்கவுள்ளது.

இந்த வைத்தியசாலையின் செயற்பாடுகள் தற்போது கிளிநொச்சி சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

மேற்படி வைத்தியசாலை எதிர்வரும் 18ஆம் திகதி யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தால் பொறுபபேற்கப்படும் என்றும் -

அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு இவ் வைத்தியசாலையைப் பொறுப்பேற்பதற்காக யாழ். பிரதி மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் யாழ். பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தைச் சேர்ந்த குழு ஒன்று இவ் வைத்தியசாலைக்கு விஜயம் செய்யும் என்றும் - சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மருதங்கேணி வைத்தியசாலையைத் தம்மிடம் கையளிப்பதற்காக கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் மற்றும் அதிகாரிகள் குழு ஒன்று அங்கு வருகை தரும் என்று யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ-51)

# நீர்வேலியில் இன்று பாராட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.15

கலாபூஷணம் விருதுபெற்ற வேலுப்பிள்ளை சிதம்பரநாதனை (பொன்னர்) பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று மாலை 5.30 மணிக்கு நீர்வேலி வடக்கு காமாட்சி அம்பாள் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

சமூகஜோதி பரராஜசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், கலாநிதி எஸ். சிவலிங்கராசா, கலாநிதி கி.விசாகரூபன், கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், கலாநிதி த.கலாமணி, கலாபூஷணம் செல்லையா மற்றாஸ்மயில், ஆசிரியர் நா.விமலநாதன், கலாவிநோதன் நா.கணபதிப்பிள்ளை, ஆசிரியர் வை.விஜயபாஸ்கர் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்துவர்.

விழா நாயகருக்கான கௌரவிப்பை இளைப்பாறிய அரச மொழிபெயர்ப்பாளர் க.சின்னராசாவும், பொற்கிழியை த.பத்மநாதனும் வழங்குவர், இசைக்கலைமணி திருமதி ஹேமாவதி கணேசலிங்கம் வாழ்த்துப்பா இசைப்பார்.

தொடர்ந்து நாடகமேடைப் பாடல்கள், பட்டிமன்றம், காத்தவராயன் சிந்துநடைக் கூத்து என்பன இடம்பெறும். (எ)

# ஐ.நா.பாதுகாப்பு கவுன்ஸில் விஸ்தரிப்பு; ஆதரவு, எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிரம்

நியூயோர்க்,ஏப்.15

ஐ.நா.பாதுகாப்புக் கவுன்ஸிலில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்தை இந்தியா உட்பட மேலும் சில நாடுகள் கோரிவருகின்றன. இதற்கு ஆதரவு, எதிர்ப்பு நடவடிக்கைகள் தற்போது ஐ.நாவில் மும்முரமாக நடந்துவருகின்றன.

இந்தியா, ஜப்பான், ஜேர்மனி, பிரேசில் ஆகியன ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்தைக் கோருகின்றன. இந்த நாடுகளின் (ஜி4) தலைமையில் ஒரு குழு செயற்படுகிறது. புதிதாக சில நாடுகளுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்துப் பதவி தருவதைவிட, நிரந்தர அந்தஸ்து அல்லாத நாடுகளின் எண்ணிக்கை உயர்த்தலாம் என வலியுறுத்தி பாகிஸ்தான், இந்தாலி (காபி கிளப்) தலைமையில் சில நாடுகள் செயற்பட்டு வருகின்றன.

பாகிஸ்தான், இத்தாலி தலைமையிலான நாடுகள் கூடி தங்களுக்குள் ஒரு குழுவை அவை அமைந்தன. இக்குழுவின் முதற்கூட்டம் விரைவில் நடத்தப்படும். ஐ.நா. பாதுகாப்பு மன்றத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற பிரச்சினைக்கு, பெரும்பாலான நாடுகள் ஏற்கும் ஒரு தீர்வை ஏற்படுத்த விரும்பும் எந்த நாடும் இதில் சேரலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான், இத்தாலி தலைமையிலான நாடுகள் நடத்திய கூட்டத்துக்கு பிரிட்டன், பிரான்ஸ் செல்லவில்லை. இது குறித்து பாகிஸதான் கூறும்போது, முதற்கூட்டம் தான் தற்போது நடந்துள்ளது. இனிவரும் நாள்களில் மேலும் பல உறுப்பினர்கள் வருவர் என்று கூறியது.

ஆர்ஜென்டினா, கொலம்பியா, மெக்சிக்கோ ஆகிய நாடுகள், பிரேசில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து பெறுவதை எதிர்க்கின்றன. ஸ்பெயின், இத்தாலி ஆகியன ஜேர்மனி நிரந்தர உறுப்பினர் ஆகக்கூடாது என்று கூறுகின்றன.

ஜப்பான் நிரந்தர உறுப்பினராவதை தென்கொரியா, சீனா ஆதரிக்கவில்லை. இந்தியா நிரந்தர உறுப்பினராகக்கூடாது எனப் பாகிஸ்தான் வெளிப்படையாக இதுவரை கூறவில்லை.

'ஜி4' நாடுகளுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து தேவையில்லை. அவை செல்வாக்கு உள்ள நாடுகள். எந்தப் பிரச்சினையிலும் அவை தங்களது கருத்தை வலியுறுத்தி முடியும் - என்றும் நாடுகள் தெரிவிக்கின்றன. (8)

# கத்தி முனையில் மாணவிகள் கடத்தல்

ஜேர்மனியின் வடமேற்குப் பகுதியில் உள்ள என்னிபடல் நகரப் பள்ளிக்கூடத்திற்கு மாணவிகளை ஏற்றிக்கொண்டு ஒரு பஸ் சென்றது. அப்போது அந்தப் பஸ்ஸை வழிமறித்த ஒரு வாலிபர் பஸ்ஸுக்குள் இருந்த மாணவிகளை கத்தியைக் காட்டி மிரட்டினார். 4 மாணவிகளைப் பணயக் கைதிகளாக வைத்துக்கொண்டு மற்ற மாணவிகளை அவன் கிழே இறக்கிவிட்டான்.

பின்னர், பஸ்ஸைக்கடத்திச் சென்று சற்றுத் தூரத்தில் நிறுத்தினான். அந்த 4 மாணவிகளையும் மீட்க அவனுடன் பேச்சு நடத்தப்பட்டது. அப்போது அதிரடிப்படையினர் திடீர் தாககுதல் நடத்தி 4 மாணவிகளையும் மீட்டனர். 6 மணி நேரப் போராட்டத்துக்குப் பின் அவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர். மாணவிகளை கடந்திய கடத்தல்காரன் ஈரான் நாட்டை சேர்ந்தவன் (8)

உலக அரங்கில்

# புதிய பாப்பரசர் தெரிவுக்கான தேர்தல் 18ஆம் திகதி வத்திக்கானில் நடக்கும்

வத்திக்கான்,ஏப்.15

புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை வத்திக்கானில் நடைபெறுகின்றது. 117 கர்தினால்கள் இதில் கலந்துகொண்டு வாக்களிக்கவுள்ளனர்.

இதன் முதற்கட்டமாக கர்தினால்களுக்கிடையிலான ஆலோசனைகள் அவ்வப்போது வத்திக்கானில் நடைபெறுகின்றன.

பாப்பரசர் தேர்தல் போட்டியில் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் முன்னணியில் இருக்கிறார். அவர் பாப்பரசர் ஆக ஆதரவு பெருகிவருவதாக இத்தாலியப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது.

ரட்சிகருக்கு ஆதரவு பெருகிவருவதற்கு, அவர் மறைந்த பாப்பரசருக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவர் என்பதும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே புனித பீற்றர் தேவாலயத்தில் பாப்பரசரின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடம் பொதுமக்கள் பார்வைக்காக நேற்று முன்தினம் முதன் முதலாக திறக்கப்பட்டது.

ஏராளமான ஆண்களும், பெண்களும் அங்கு சென்று அஞ்சலி செலுத்தினார்கள். பிரார்த்தனையும் நடத்தினார்கள். அப்போது சிலர் துக்கம் தாங்காமல் அழுத்தனர்.

வத்திக்கான் அஞ்சல் நிலையத்தில் விற்பனை செய்யப்படும். பாப்பரசர் நினைவு அஞ்சல் தலையைப்பெறவும் ஆயிரக்கணக்கானவர்கள் குவிந்துள்ளனர்.

வரிசையைக் கட்டுப்படுத்த ஏற்பாடுகள் எதுவும் இல்லாததால் வரிசையில் நிற்பவர்களே காகிதத் துண்டுகளில் வரிசை எண்களைக் குறித்துக்கொண்டு அதன்படி அஞ்சல் தலைவர்களை வாங்கிச்சென்றனர்.

அடுத்த பாப்பரசர் பதவி ஏற்கும் வரை தான் இந்த அஞ்சல் தலைகள் செல்லுபடியாகும். ஆனால், இந்த அஞ்சல் தலைகள் முககிய வரலாற்று ஆவணங்கள் என்பதால் அவற்றை வாங்குகிறோம் என்று பெரும்பாலோனோர் தெரிவித்தனர்.

அடுத்த பாப்பரசர் அணியவிருக்கும் மாதிரி ஆடைகள் ரோம் நகரில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

பாப்பரசரின் உடைகளை 200 ஆண்டுகளாகத் தைத்துவரும் 'கம்மரெல்லி' நிறுவனம் தங்கள் கடையில் அவற்றைப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்துள்ளது.

பாப்பரசர் தங்கும் இடங்களில் வெப்பத்தை ஏற்படுத்தும் கருவிகள் இருப்பதால், உடைகள் அனைத்தும் மெல்லியதாகவும் குறைந்த எடையுடனும் இருக்கும் என்று அந்நிறுவனத்தினர் தெரிவித்தனர். (8)

# பேரிழப்பைச் சந்தித்தபோதும் கல்வித் தொண்டை கைவிடாதவர்

லண்டன்,ஏப்.15

பேரிழப்பைச் சந்தித்தபோதும் கல்வித் தொண்டைக் கைவிடாத இந்தோனிஷிய ஆசிரியை ஒருவர் உலகப் பிரமுகர்களுக்கு சமமான கௌரவத்தைப் பெற்றுள்ளார்.

பல்வேறு துறைகளிலும் சாதனைபுரிபவர், மனித குலத்துக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றுபவர் என நூறுபேரை அமெரிக்காவின் 'ரைம்' சஞ்சிகை வருடந்தோறும் தெரிவுசெய்து கௌரவிக்கிறது. அவ்வாறு இந்த வருடம் வெளியிடப்பட்டோர் பட்டியலில், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், போன்றோருடன் 30 வயதான டினா அஸ்ரிரா என்ற இந்தோனேசிய ஆசிரியையும் இடம்பிடித்துள்ளார்.

சுமாத்ரா தீவில் உள்ள கலாங நகரில் உள்ள பாடசாலையில் ஆசிரியையாகப் பணியாற்றினார் டினா. அவருக்கு மூன்று பிள்ளைகள்.

கடந்த டிசெம்பரில் ஏற்பட்ட சுனாமி அனர்தத்தில் டினாவில் 3 பிள்ளைகளும் பலியாகினர். வீடும் தரைமட்டமானது.

ஆனால், மனம்தளராத டினா, தனது மாணவர்களை ஒன்றுதிரட்டி ஊக்கப்படுத்தித் தனது கற்பித்தல் செயற்பாட்டை ஆரம்பித்தார். இந்தக் கல்வித்தொண்டு சாதனையாளர் பட்டியலில் அவரும் இடம்பிடிக்கக்காரணமானது.

எனது 3 பிள்ளைகளை ஒரு நேரம் இழக்க நேர்ந்தது எனது துரதிஷ்டம். ஆனால், மாணவர்களின் எதிர்காலம் பாழாகி விடக்கூடாதென்ற உணர்வே கற்பித்தலை ஆரம்பிக்கத் தூண்டியது - என்று கூறியுள்ளார் டினா அஸ்ரிரா. (ஒ)

**உதயன்**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பேரிடர் விளைவிக்கும் பேரினவாதப் போக்கு....!

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரம நாயக்க, இப்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டில் இல்லாததால் பதில் பாதுகாப்பு அமைச்சரும் கூட.

அவரைத் தமது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் பிரதமராக வைத்துக்கொண்டுதான் 2001 டிசெம்பரில் பொதுத்தேர்தலைச் சந்தித்தார் ஜனாதிபதி குமாரதுங்க.

அவ்வேளையில், ரத்னசிறி விக்கிரமநாயக்க பகிரங்கமாக ஆற்றிய பௌத்த - சிங்கள மேலாண்மைப் போக்கு உரைகள் பெருமளவில் அப்போதைய சந்திரிகா அரசு தேர்தலில் தோற்கவும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சிக் கட்டில் ஏறவும் காரணமாக அமைந்தன.

அந்தத் தேர்தலுக்குப் பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் கோட்டைவிட்டு, ஒதுக்கப்பட்டிருந்த ரத்னசிறி விக்கிரமநாயக்க, கடந்த பொதுத் தேர்தலில் ஜனாதிபதி குமாரதுங்கவின் பொதுமக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடவில்லை. குறைந்த பட்சம் அந்த முன்னணியின் தேசியப் பட்டியல் வேட்பாளர்களின் வரிசையில்கூட அவர் இடம்பெற்றிருக்கவில்லை. 2001 டிசெம்பர் தேர்தலில் பெற்றபாடம், அவரை 2004 தேர்தலில் ஒதுக்கிவைக்க ஜனாதிபதி குமாரதுங்கவைத் தூண்டியிருக்கக்கூடும்.

ஆனால், 2004 இல் ஆட்சி அமைத்ததும் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற மாதிரியில் தமது அணியின் தேசியப் பட்டியலில்கூட பெயர் குறிப்பிடப்படாமல் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த - தமது கட்சியின் மூத்த அரசியல்வாதியான - ரத்னசிறி விக்கிரமநாயக்கவை மீண்டும் அரசுக்குள் இணைத்துக்கொண்டார் சந்திரிகா. அதுவும் பௌத்த, சிங்கள மேலாண்மைவாதம் போடவும், அந்த வழியில் பேரினவாதப் போக்கை நடைமுறைப்படுத்தவும் வசதியாக சட்டம் - ஒழுங்கு மற்றும் பௌத்த சாசன அமைச்சும் பாதுகாப்புப் பிரதி அமைச்சும் அவருக்குக் கொடுக்கப்பட்டன.

இப்போது தன் கைவரிசையைத் தொடங்கிவிட்டார் ரத்னசிறி விக்கிரமநாயக்க.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அடுத்து, அந்தப் பதவிக்குத் தமது கட்சியின் சார்பில் தாமே போட்டியிட வேண்டும் என்ற இலக்கில் - சந்திரிகாவுக்கு அடுத்த தலைவர் என்ற பதவி நிலையை எட்டவேண்டும் என்ற அவாவில் - நோக்கில் செயற்படும் ரத்னசிறி, அதனை எட்டுவதற் குப் பேரினவாதப் பூதம் உதவும் என்று நம்பி அதன் மேல் ஏறி அமர்ந்துகொண்டுவிட்டார்.

தமக்கு அடுத்து கட்சிக்குள் உயர்நிலைக்கு வருபவர், தமது போக்குக்குத் தலையாட்டிச் செயற்படும் தலையாட்டிப் பொம்மையாக இருக்கவேண்டும் எனக் கருதும் ஜனாதிபதி குமாரதுங்க, அதற்குப் பொருத்தமானவர் ரத்னசிறியே எனக் கருதி, அதற்கு வழி சமைக்கும் விதத்தில் பேரினவாதப் போக்கில் அவர் செயற்பட விட்டு அதற்கு அனுமதியும் அளித்திருக்கின்றார் எனலாம்.

அமைச்சர் ரத்னசிறியின் அண்மைக்காலப் பேச்சுக்களும் போக்குகளும் அதனைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

"நாட்டு மக்கள் (சிங்கள மக்கள்) உத்தரவிடுவார்களானால் புலிகள்மீது பெரும் யுத்தத்தைத் தொடுக்க அரசுப் படைகள் எந்நேரமும் தயாராகவிருக்கின்றன" - என்று ஒருநாள் அவர் முழங்குகின்றார்.

"புலிகள் யுத்தமொன்றுக்குத் தயாராகுகின்றனர்; அதற்கான சமிக்ஞையை வெளிப்படுத்துகின்றனர்" - என்று இப்போது புதுக்கதை விடுகின்றார். இதன் மூலம் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்க முயல்கின்றார் அவர்.

அரசு - புலிகள் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முந்திய நிலைக்குக் கிழக்கு மாகாணத்தைக் கொண்டுபோக அவர் விடாப்பிடியாக நிற்கின்றார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். கிழக்கில் அரச படைகளின் வீதிச்சோதனை, ரோந்து, சுற்றிவளைப்புத் தேடுதல் போன்றவற்றைப் பழையபடி ஆரம்பிப்பதற்கும் அதற்கு வசதியாக அங்கு துருப்புக்களைக் குவிப்பதற்கும் அரச மேல் மட்டத்திலிருந்து உத்தரவுகள் பறந்திருக்கின்றன எனத் தெரிகின்றது. அந்த உத்தரவுகளின் பின்னணியில் முக்கிய சூத்திரதாரியாக - நபராக - பதில் பாதுகாப்பு அமைச்சரே உள்ளதாகக் கருதப்படுகின்றது.

இத்தகைய பேச்சுக்கள், செயற்பாடுகள் பேரினவாதிகள் மத்தியில் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கு நல்ல வரவேற்பை - செல்வாக்கை - பெற்றுத்தரக்கூடும்; ஒன்றுமில்லாத அவரை, ஜனாதிபதி குமார துங்கவுக்கு அடுத்தநிலைத் தலைவராக உயர்த்தவும் அவை உதவக்கூடும்.

ஆனால், இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வை - சமாதான இணக்கத்தை - எட்டுவதற்குக் கிடைத்திருக்கும் இந்தக் கடைசி வாய்ப்பை இந்தப் பேரினவாதப் போக்குக் குழப்பியடித்துவிடும். சமாதான முயற்சிகளில் மீளத் திருத்தமுடியாத மோசமான பாதிப்பை அவை ஏற்படுத்திவிடும்.

தங்களின் தனிப்பட்ட அரசியல் அவாக்களை - நோக்கங்களை - இலக்குகளை - எட்டுவதற்காக இத்தகைய பேரினவாதப் போக்காளர்களை அரசியலில் முன்னிறுத்தும் நாட்டுத் தலைவர்கள் (?), ஒருகணம் நாட்டின் எதிர்கால நலன்குறித்துச் சற்றுச் சிந்திப்பது அவசியம்.

# ஜனாதிபதி வேட்பாளரைத் தீர்மானிப்பது ஹெல உறுமயவின் கைகளிலேயே உள்ளது!

## வண. அதுறுலியே ரத்னதேரர் சொல்கிறார்

கொழும்பு.ஏப்.15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரைத் தீர்மானிப்பது ஜாதிக ஹெல உறுமயவின் கைகளிலேயே தங்கியுள்ளது. இவ்வாறு சிங்களப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியில் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் வண. அதுறுலியே ரத்னதேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

சிங்களத் தேசியத்தை நிலைநிறுத்தும் முயற்சியில் பல்வேறு தரப்புகள் இணைந்து கொண்டன. அதனைப் போதனைகளாக நடைமுறை அரசியலில் இளைஞர் அமைப்புகள் மூலம் நாம் முன்னெடுத்தோம். இது கருத்து வெளிப்பாடாகவும், செயற்பாடுகளாகவும் பலம் பெற்றுள்ளன.

சிங்கள பௌத்த தேசியவாதத்தை நாம் வற்புறுத்தி வந்தோம். அதனாலேயே அரசு மற்றும் எதிர்த் தரப்புகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் பலர் முக்கிய பதவிகளை அடைந்தனர். சிங்களத் தேசியவாதத்தை வற்புறுத்தும் எம்மை எவராலும் அழித்துவிட முடியாது. அது அரசியலுக்கு அப்பாற்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் யார் என்பது நாம் எடுக்கும் முடிவிலேயே தங்கியுள்ளது. ஜாதிக ஹெல உறுமய கட்சி சார்பாக ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக யார் நிறுத்தப்படுவார் என்பது குறித்து இப்போது எதுவும் கூற முடியாது. அரசியலில் எதுவும் எந்த வேளையிலும் நடக்கலாம்.

முன்னர் ஐ.தே.முன்னணி தவறான நிர்வாகத்தை மேற்கொள்வதாகக் குற்றஞ்சாட்டிய ஐக்கிய சுதந்திர முன்னணி, இன்று தவறான வழியிலேயே நிர்வாகத்தை நடத்துகிறது.

கருணா தரப்புக்கும் புலிகள் தரப்புக்கும் இடையே உருவான முரண்பாட்டை, ஐ.தே.கட்சியாயினும் சரி ஐ.சு.முன்னணியாயினும் சரி நாட்டுக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தவறிவிட்டன.

சுனாமி அனர்த்தத்தைப் பயன்படுத்தி பெரிய அளவில் சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெற்றிருக்க முடியும். ஸ்திர மற்ற நிலையிலிருந்த அரசை எதிரணியினரின் உதவியைப் பெற்று ஸ்திரப்படுத்தியிருக்க முடியும். நாட்டின் தேசியத்தைக் கட்டிக்காக்க எதிரணிகளை ஒன்றிணைத்து செயற்படத்தக்க சந்தர்ப்பத்தை சுனாமி அனர்த்தம் அரசுக்கு வழங்கியது. குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பிடிவாதத்தால் அரசு சகல வாய்ப்புகளையும் இழந்துவிட்டது.

எனவே, அரசின் நியாயமற்ற நடவடிக்கைகளுக்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராடும் பொறுப்பு எமக்குண்டு. உயிரைப்பணயம் வைத்தாவது நாம் எமது பொறுப்பை நிறைவேற்றுவோம் - என்றார் அதுறுலியேரத்னதேரர்.

(ஒ-206)

# திராய்மடு துப்பாக்கிச் சூட்டில் இளம் குடும்பஸ்தர் படுகாயம்!

ஏறாவூர்.ஏப்.15

மட்டக்களப்பு தலைமையகப் பொலீஸ் பிரிவுக்குட்பட்ட முகத்துவாரம் - திராய்மடு பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

கழுத்துப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இவர், ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார் என மட்டக்களப்பு பொலீஸார் தெரிவித்தனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான செல்வமணி யோகேஸ்வரன் (வயது-34) என்பவரே காயமடைந்தவராவார்.

இரவுவேளை இவர் கடற்கரையில் நின்றிருந்தபோது தேடி வந்த இரண்டு இனம் தெரியாத நபர்கள் இவர் மீது கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று தெரிவிக்கும் மட்டக்களப்பு தலைமையகப் பொலீஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தாம் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

(எ-க)

# சாந்தனின் நூல் அறிமுக நிகழ்வு!

யாழ்ப்பாணம்.ஏப்.15

உதயனின் வார இதழான சஞ்சீவியில் எழுத்தாளர் ஐ.சாந்தன் வரைந்த இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம் (படைப்பு, படைப்பாளர் பற்றிய குறிப்புகள்) கட்டுரைத் தொடர் நூல் வடிவில் வெளிவந்துள்ளது.

மூன்றாவது மனிதன் வெளியீடாக வந்துள்ள இந்த நூலின் அறிமுக வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பலாலி வீதியில் - கந்தர்மடம் பகுதியில் - அமைந்துள்ள பிரெஞ்சு நட்புறவுக்கழக மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

ஏ.ஜே.கனகரத்தினா தலைமையில் வைபவம் இடம்பெறும்.

வரவேற்புரையை பிரெஞ்சு நட்புறவுக்கழக இயக்குநர் கலாநிதி ஜெராட் றொஷான் நிகழ்த்துவார்.

கவிஞர் சோ.பத்மநாதன், ராதேயன், பொன்.பூலோகசிங்கம் ஆகியோர் நூல் நோக்குரைகளை வழங்குவர். (ஐ)

# அமெ. பிரதி இராஜாங்க அமைச்சர் அடுத்தவாரம் இலங்கை வருகிறார்

கொழும்பு.ஏப்.15

அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா அடுத்த வாரம் இலங்கைக்கு வர உள்ளார்.

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கும் ஆழிப்பேரலை அனர்த்தநிவாரண, மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக் கட்டமைப்பொன்றை விரைவில் உருவாக்குவதற்குமான அழுத்தத்தை அரசுக்கு வழங்கும் வகையில் றொக்காவின் விஜயம் இடம்பெறவுள்ளது.

கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் ஆகியோரை றொக்கா சந்தித்துப் பேசுவார்.

ஏற்கனவே கடந்த வருடம் மே மாதம் கொழும்பு வந்திருந்த கிறிஸ்ரினா றொக்கா இணக்கப்பாட்டுப் பேச்சு மூலம் இலங்கைப் பிரச்சினை தீர துரித நடவடிக்கைகள் எடுக்கப்படுமென வலியுறுத்தியிருந்தார்.

இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பூட்டான், பங்களாதேஷ், இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளுடனான அமெரிக்காவின் இராஜதந்திரத் தொடர்புகளைப் பேணும் பொறுப்பை கிறிஸ்ரீனா றொக்கா வகிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

# பிறந்துள்ள பார்த்திப வருடம் சகலருக்கும் மிகுந்த சுகம் தரும்

## இந்துமத குரு பீடாதிபதி செய்தி

யாழ்ப்பாணம்.ஏப்.15

பிறந்துள்ள இப்பார்த்திப வருஷத்தில் பூமியில் நன்மழையால் பழங்கள், புஷ்பங்கள் முதலானவைகளும் பசு வர்க்கங்களும் விருத்தியாகி அரசர்களும் ஜனங்களும் மிகுந்த சுகமடைவர்.

- இவ்வாறு சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக் குருக்கள் வழங்கிய புத்தாண்டு ஆசிச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் -

புத்தம் புதிய மலராக மலர்ந்து பிரகாசிக்கும் தமிழ் புதுவருடமாகிய பார்த்திப வருடம் பிறந்துள்ள இந்நன்னாளிலே அனைத்து ஜீவராசிகளுக்கும் நன்மை பயப்பதோடு, மனித குலத்திற்கு புத்துணர்ச்சியையும் தார்மீக எண்ணத்தையும், தயாள குணத்தையும் உயர்ந்த சிந்தனையையும் பூரணமாகத் தருவதோடு, இனம், மதம், மொழி கடந்து அனைத்து மக்களும் இப்பூமாதேவியின் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள் என்ற உயர்ந்த எண்ணத்துடன் செயற்பட திடசங்கற்பம் கொள்ளவேண்டும். அத்துடன் உயிர்ச்சேதம், இயற்கை, செயற்கை அனர்த்த அழிவுகள், வறுமை, நோய், மனக்கஷ்டம் ஆகியன முற்றாக நீங்கி, மானிட வாழ்க்கையின் மகிமையை உணர்ந்து இவ்வையத்துள் சிறப்பாக வாழ சதுர் தாரகையாகவும், பொறுமையின் தாயாகவும் விளங்கும் இப்பூமாதேவியை இந் நன்னாளிலே வணங்கிப் பிரார்த்திக்கின்றேன்.

நாடு, நிலம், மக்கள் கௌரவமாக வாழ்க்கை கிடைக்கவேண்டுமென ஆசி கூறுகின்றேன். (ஜ-12)

**நாளை**

*சித்திரை 03*
*சனிக்கிழமை*
*16.04.2005*
திதி : ஸப்தமி
*காலை 07.43 வரை*
நட்சத்திரம் : *புனர்பூசம்*
*முன்இரவு 09.37 வரை*
*மகா அட்டமி நாள்*
*சுபநேரம் : 03.04 - 04.34*
*ராகுகாலம் : 09.04 - 10.34*
*(யாவும் பழைய நேரப்படி)*

# நல்லெண்ணெய் உற்பத்தியாளர்கள் தயாரிப்பு விதிகளைப் பேண வேண்டும்

## உணவு, மருந்துப் பரிசோதகர் அறிவுறுத்து

வலி.தென்மேற்கு.ஏப்.15

நல்லெண்ணெய் உற்பத்தியாளர்கள் சுகாதார விதிகளைத் தீவிரமாகப் பின்பற்ற வேண்டும். தவறினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

யாழ்.மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகர் ரி.மகாதேவன் இவ்வாறு அறிவித்தார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையும் யாழ்.சுகாதாரத் திணைக்களமும் இணைந்து பிரான்பற்றில் நல்லெண்ணெய் உற்பத்தியாளர்களுக்கான கலந்துரையாடல் கூட்டத்தை நடத்தின. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகர் மேலும் கூறியதாவது:

உடல் நலத்திற்காகவும் சில நோய்களுக்கு மருந்தாகவும் நல்லெண்ணெய் மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது நல்லெண்ணெய்யில் கலப்படம் செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதுதொடர்பாகக் காத்திரமான நடவடிக்கையை நாம் மேற்கொள்ளவிருக்கின்றோம். நல்லெண்ணெய் தயாரிப்பவர்கள் சுகாதாரத் திணைக்களத்தின் சிபார்சுடன் கூடிய, பிரதேச சபையின் அனுமதிப் பத்திரத்தைப் பெறவேண்டும். அத்துடன், சந்தைப்படுத்தப்படும் நல்லெண்ணெய்ப் போத்தல்களில் உற்பத்தி செய்த திகதி, காலாவதியாகும் திகதி, தொகுதி இலக்கம் என்பன குறிப்பிடப்பட வேண்டும். இவற்றை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கு இப்பகுதியிலுள்ள நல்லெண்ணெய் உற்பத்தியாளர்கள் தங்கள் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார். இக்கூட்டத்தில் பண்டத்தரிப்பு பொது சுகாதாரப் பரிசோதகர் என்.நிர்மலானந்தன், சுதுமலை பொது சுகாதாரப் பரிசோதகர் பி.சிவகுமார் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ-135)

**உதயவாக்கு**

பகைவரிடமும் அன்பு காட்டி அவரிடமிருந்து நலம் பெறுதல் நல்லோர் இயல்பு. - *நீதிவெண்பா.*

## பதவி வெற்றிடங்கள்

**சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வில் ஈடுபடும் ஓர் அரச சார்பற்ற நிறுவனத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. தகைமையுடையோர் உடடினயாக விண்ணப்பிக்கவும்.**

01. கணக்காளர் (ஆண்)
B.Com, ஆங்கில அறிவு, கணனி அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

02. மாவட்ட மேற்பார்வையாளார் (ஆண்/ பெண்) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரியாகவும், ஆங்கில அறிவு, வேலை அனுபவம் உடையவராகவும், மோட்டார்சைக்கிள் ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

03. பிரதேச மேற்பார்வையாளர்கள்- பருத்தித்துறை, மருதங்கேணி (ஆண்/பெண்)
க.பொ.த. (உ/த) சித்தியடைந்தவராகவும், வேலை அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

04. அலுவலக உதவியாளார் (ஆண்)
க.பொ.த. (சா/த) சித்தியடைந்தவராகவும், வேலைஅனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

05. சமையல்காரர் (ஆண்)
ஆங்கிலம் விளங்கக் கூடியவராக இருத்தல் நன்று.


விண்ணப்பங்கள் ஆங்கிலத்தில் தயாரித்து 21.04.2005இற்கு முன் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**தலைவர்,**
யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவன்ங்களின் இணையம்,
40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

மேலதிக விவரங்களிற்கு யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின இணைய நிர்வாக உத்தியோகத்தரைத் தொடர்புகொள்ளவும்.

(44171)
(39-11-15)
**தொலைபேசி இல. 021 2223668**


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



*தோற்றம்* 22 – 03 – 1921

*மறைவு* 29 – 04 – 2001

## அமரர் நாகராஜா சிறீதரன்

**திதி: 15.04.2005**

மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனித வாழ்வு வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
வருடங்கள் நான்கு உருண்டோடினாலும்
உயிருள்ள வரை எமக்காய் வாழ்ந்தாய் - ஐயா
எம் உயிர் உள்ளவரை உம்மை நாம் மறவோம்

பிரிவால் துயருறும்:
**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*புலவனார் வீதி,*
*கல்வியங்காடு.*
(44234)(42-11-15-39)

**சர்வதேச லயன்ஸ் கழகம். மாவட்டம் 306 B யின யாழ். மாவட்ட தொழில்வழிகாட்டல் கல்விப் பிரிவின் ஏற்பாட்டுடன் யாழ். மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரணையுடன்**

**மொறட்டுவைப் பல்கலைக் கழக**
**தமிழ் இலக்கிய மன்றம் வழங்கும்**

**தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல்**
**ஆற்றல் மேம்படுத்துகை மற்றும் கணனியல்**
## கருத்தரங்கு

உயர்தரப் பரீட்சைக்குபின் பல்கலைக்கழக அனுமதி பெறாதவர்களின் நிலை என்ன? நட்டாற்றில் விடப்பட்டவர்களாய் திக்கு திசை தெரியாமல் தள்ளாடுகின்றோம். தகைமைகள் இருந்தும் உயர் கல்வித் தெரிவுகளில் தவறவிடப்படுகின்றோம். காரணம் என்ன? அடுத்த நகர்வைப் பற்றி மாணவர் மத்தியில் தெரியவில்லை. தொழில் வாய்ப்பிற்கு ஏற்றவகையில் சூழ்நிலை தொழில் சார் கற்கை நெறிகளைத் தேர்ந்தெடுக்கத் தெரியவில்லை.

மாணவர் மத்தியில் இருக்கும் தெரிவின்மையை நீக்கி புதிய உலகை நோக்கி வழிகாட்டும் முகமாக வடக்குப் பகுதிகளில் பல கருத்தரங்குகளை நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில்

சூழ்நிலை தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல்
(Career Guidence)
சூழ்நிலை கணணியியல் கருத்தரங்கு
(Group discussion of Computing)
ஆற்றல் மேம்படுத்துகை விவாதம்
Skill development programme
என்பன உள்ளடங்கும்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | யா/மத்திய கல்லூரி | 16.04.2005 |
| வடமராட்சி | யா/நெல்லியடி மத்திய கல்லூரி | 17.04.2005 |
| சாவகச்சேரி | யா/டிறிபேர்க் கல்லூரி | 18.04.2005 |
| வலிகாமம் | யா/இராமநாதன் கல்லூரி | 18.04.2005 |

**நேரம்: 8.30- 4.30**
**பிரவேசம்: இலவசம்**

**இளைஞர்களின் எதிர்காலத் திட்மிடலை இலகுவாக்கும் இந் நிகழ்வில் பங்குபற்றி பயன் பெறுமாறு மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழக்கின்றோம்.**

**தமிழ் இலக்கிய மன்றம்**
**மொறட்டுவைப் பல்கலைக்கழகம்**

(44222)(39-11-15)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.15

அரியாலை புனித யூதாததேயு [illegible]த்தலப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இன்று மாலை 5 மணிக்கு செபமாலையும் தொடர்ந்து கொடியேற்றமும் இடம் பெறும். எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழாத் திருப்பலி இடம்பெறும். (ஒ-202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.15

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் பெருந்திருவிழா இன்று நண்பகல் 12.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 13 தினங்கள் நடைபெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 23 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 24 ஆம் திகதி தீர்த்தோர்சவமும் இடம் பெறவுள்ளன.

திருவிழாக்காலத்தில் தினமும் 7 மணிக்கு 'வாக்கிற்கு அருணகிரி' என்ற தலைப்பில் இரா. செல்வவடிவேல் தொடர் சொற்பொழிவாற்றுவார். (ஒ-202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.15

பருத்தித்துறை கோட்டுவாசல் அம்பாள் திருக்கோயில் பிரமோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றமும் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்குத் தேரும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு சமுத்திரத் தீர்த்தமும் இடம்பெறும். (ஒ-202)

★ ★ ★

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா இன்று கொடியேறறத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங்களுக்கு நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரத் திருவிழாவும், 23ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவனமும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (ஒ-12)

## 'ஓட்டோ' விபத்து!

தென்மராட்சி,ஏப்.15

வீதியின் குறுக்கே ஓடிய சிறுவனைக் காப்பாற்ற முனைந்த வேளையில் தென்னைமரத்துடன் மோதியது முச்சக்கரவண்டி.

மிருசுவிலில் இடம்பெற்ற இவ் விபத்தில் முச்சக்கர வண்டியின் சாரதியான இராசன் உதயசீலன் (வயது 23) என்பவர் காயமடைந்தார்.

காயமடைந்த அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.(ஒ-117)


**ஓட்டோ, கார் சாரதி தேவை**

சாரதி அனுமதிப் பத்திரம் உடைய நாற்பது வயதிற்கு மேற்பட்ட சாரதி தேவை.

தொடர்பு:
**சிவா வீடியோ லைபிறறி**
**முடமாவடி, திருநெல்வேலி.**
(44223)(39)

**விற்பனைக்கு**

* 10- நம்பர் டை மெஷின்
* 6- நம்பர் டை மெஷின்
* 3- நம்பர் டை மெஷின்
* டபிள் கியர் டபிள்றோளர் மெஷின் (புதியது)
* Coine டை (20)
* 145 டை
* 1 பெரல் மெஷின்

**ஆகியவை எம்மிடம் விற்பனைக்குண்டு.**
தொடர்பு: E.S.K,
232, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்,
T.P. 077 6032188

**தேவை**

* தொலைபேசி இயக்குநர்கள் (பெண்கள்)
* கணனி இயக்குநர்கள் தேவை.

நேரடியாகவோ/தபால் மூலமோ உடன் விண்ணப்பிக்கவும்.

கணேசன் கொமினிக்கேஷன்ஸ்,
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி,
(44221)(39) T.P.222 2585

**கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்**

16-04-2005
18-04-2005 } பகல் 10.00 மணி

அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வார இறுதிப் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன என்பதை அறியத்தருகிறோம்.

**இயக்குநர்,**
**IIS, யாழ்ப்பாணம்.**

(சி-42111)(24-11-15)


**யாழ்ப்பாணம்– திருநெல்வேலி– அரசடி**
## ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம்
## மஹோற்சவ விஞ்ஞாபனம்

**விஷேச உற்சவங்கள்**

01 ஆம் நாள் (15.04.2005) வெள்ளிக்கிழமை காலை 09.30 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்)
07 ஆம் நாள் (21.04.2005) வியாழக்கிழமை மாலை குதிரை வாகனம்
08 ஆம் நாள் (22.04.2005) வெள்ளிக்கிழமை மாலை சப்பரம்
09 ஆம் நாள் (23.04.2005) சனிக்கிழமை காலை தேர்த்திருவிழா
10 ஆம் நாள் (24.04.2005) ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்தம் மாலை திருவுஞ்சல். துவஜாவரோகணம் (கொடியிறக்கம்) சண்டேஸ்வரி உற்சவம் நடைபெறும்.
11 ஆம் நாள் (25.04.2005) திங்கட்கிழமை மாலை புங்காவனம் - உபயம் திருநெல்வேலி இளைஞர்
12 ஆம் நாள் (26.04.2005) செவ்வாய்க்கிழமை மாலை பிராயச்சித்த அபிஷேகம். வைரவ உற்சவம்.

**அடியார்கள் உற்சவ தினங்களில் அம்பாளின் அருட்காட்சிகளைக் கண்டு தரிசித்து அன்னையின் அருளைப் பெறுமாறு வேண்டுகின்றோம்.**

**திருநெல்வேலி ஸ்ரீ சிவகாமசுந்தரியே!**
**அருள் நலம் பெருக்க கொடியேற்று!**

போரை மண்ணில் ஓய வைக்க கொடியேற்று
புதிய வாழ்வை மலர வைக்க கொடியேற்று
சேரும் பகையை விலக்கி வைக்க கொடியேற்று
செல்வ வாழ்வை செழிக்க வைக்க கொடியேற்று
நீளும் துயரை நிறுத்தி வைக்க கொடியேற்று
நிரந்தர தீர்வைத் தந்து காக்க கொடியேற்று
சூழ இன்பம் பெருக்கி வாழ வைக்க கொடியேற்று
சூலம் வாளை கையிலேந்தி கொடியேற்று!
(கவியாக்கம்: மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன)

யாழ்ப்பாணம்- திருநெல்வேலி - அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயத்தில் இன்று (2005.04.15) வெள்ளிக்கிழமை நடைபெறும் கொடியேற்ற விழா சிறக்க வாழ்த்துவோர்:

**கனகா பத்திரிகை விற்பனையகம்,**
**இல. 6, நவீனசந்தை, திருநெல்வேலிச்சந்தி,**
**திருநெல்வேலி.**

(சி.42315) (39-15-11)

வடகோவை இலுப்பையடிப்பிள்ளையார் துணை

## இரண்டாவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை



தவப்பேறு 21 – 12 – 1918

சிவப்பேறு 08 – 05 – 2003

**இணுவில்**
## அமரர் க.ஆறுமுகம் (ஆசிரியர்)

**திதி: ஸப்தமி (15-04-2005)**

எங்கள் வாழ்வின் கலங்கரை விளக்கே அப்பா!
இமைப் பொழுதும் எம் நெஞ்சில் வாழும் தெய்வம்!...
அன்புடன் இறைஞ்சுகிறோம்
ஆசி தாருங்கள். (44224) (24-14)

28, [illegible]பிள்ளையார் வீதி,
நல்லூர், [illegible]ழ்ப்பாணம்.

*திருமதி சரஸ்வதி ஆறுமுகம் (மனைவி),*
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்.*

# மரண அறிவித்தல்கள்

## திருமதி உதயராஜ் குமுதினி
## செல்வி உதயராஜ் சபீனா

வேலணை மேற்கைச் சேர்ந்தவர்களும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட உதயராஜ் குமுதினி, உதயராஜ் சபீனா ஆகிய இருவரும் 12.04.2005 சுவிற்ஸர்லாந்தில் அகாலமரணமானார்கள்.

அன்னார்கள் கொட்டடி துரைராசா தம்பதியினரின் மருமகளும், பேர்த்தியும் வேலணை மேற்கு (மண்கும்பான்) பன்னீர்ச்செல்வம் - சறோசா தம்பதிகளின் அன்பு மகளும் பேர்த்தியும் ஆவார்கள்.

அன்னார்களின் இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.68/4,*
*பரணன் கொம்மினிக்கேசன் ஒழுங்கை,*
*இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (44226)(24-11-15-42-39)

தகவல்:
கு.பன்னீர்ச்செல்வம்
(தந்தை, பேரன் - மண்கும்பான்).

## நகுலேந்திரன் சுபாசினி



சாவகச்சேரி வடக்கு, மீசாலை, பங்களா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேந்திரன் சுபாசினி 13.04.2005 புதன்கிழமை கொழும்பு அப்பலோ மருத்துவமனையில் காலமாகிவிட்டார்.

அன்னார் நகுலேந்திரனின் அன்பு மனைவியும் இந்திரஜித்தின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16-04-2005 சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*பங்களா வீதி,*
*சாவகச்சேரி வடக்கு,*
*மீசாலை.*

தகவல்:
செ.சண்முகநாதன் (கார்த்திகேசு - தந்தை)
நகுலேந்திரன் (இந்திரன் - கணவர்)
குடும்பத்தினர்.

(44229)(24-39-42-11-15)

# பார்த்திப வருடப் பலன்கள்

## துலாம்

துலாம் ராசி அன்பர்களே! இந்த புத்தாண்டு மிகச் சிறப்பாக இருக்கும். முக்கிய கிரகங்களில் ராகு 6ஆம் இடத்தில் இருந்து ஆண்டு முழுவதும் நன்மை தருவார். அவர் பொருளாதார வளத்தையும் காரிய அனுகூலத்தையும் கொடுப்பார். மற்ற முக்கிய கிரகங்கள் இந்த ஆண்டைப் பொறுத்தவரை நன்மை தரமாட்டார்கள்.

சனிபகவானை எடுத்துக்கொண்டால் அவர் தற்போது 9ஆம் இடத்தில் இருக்கிறார். அதன் மூலம் அவர் உங்கள் முயற்சியில் தடைகளை உருவாக்கிக் கொண்டிருப்பார். அவர் ஜூன் 26ஆம் திகதி 10ஆம் இடத்திற்கு மாறுகிறார். அதன்பின் அவரால் இருந்து வந்த தடைகள் இருக்காது. ஆனால், அவர் தொழிலில் சிற்சில இடர்பாடுகளை உருவாக்கலாம். குரு பகவானை எடுத்துக்கொண்டால் அவர் தற்போது 12ஆம் இடத்தில் இருக்கிறார். வீண் அலைச்சலைத் தருவார். அவர் செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி உங்கள் ராசிக்கு வருகிறார். அதுவும் சாதகம் அல்ல. அதன்பின் அவர் சில கலகங்களை உருவாக்கலாம். அதேநேரம் உங்கள் ராசிக்கு குரு வந்தபின் அவரது அனைத்துப் பார்வைகளும் சாதகமாய் அமையும். குருவின் பார்வைக்குக் கோடி புண்ணியம் என்பது ஜோதிட மொழி. அந்தவகையில் ஆண்டின் பிற்பகுதியில் அவரால் நன்மை கிடைக்கும். இன்னொரு கிரகமான கேது 12ஆம் இடத்தில் ஆண்டு முழுவதும் இருப்பார். இதனால் பொருள் விரயமும் வரலாம்.

மேற்கண்ட நிலையில் இருந்து பார்க்கும் போது ராகுவின் பலன் முழுமையாகக் கிடைக்கும். குருபார்வையின் பலன்கள் ஆண்டின் பிற்பகுதியில் கிடைக்கும் என்பதைப் புரியலாம். இதுதவிர சூரியன், செவ்வாய், சுக்கிரன், புதன், சந்திரன் ஆகியோர் அவ்வப்போது நன்மை தரத் தவறமாட்டார்கள்.

பொதுவாக இந்த ஆண்டு சிறப்பான ஆண்டாகவே இருக்கும். குறிப்பாக ஆண்டின் பிற்பகுதி கூடுதல் பலன்களைத் தரும். ஒரு செயலை ராகுவால் வெற்றிகரமாகச் செய்து முடிக்கலாம். பொருளாதாரவளம் சிறப்பாக இருக்கும். தேவைகள் அனைத்தும் பூர்த்தி ஆகும். கேது சாதகமற்ற இடத்தில் இருப்பதால் வண் விரயம் ஏற்படலாம். புதிய வாகனங்கள் வாங்கலாம். மகிழ்ச்சி கடந்த காலத்தை விட அதிகமாகும். மதிப்பு மரியாதை சிறப்பாக இருக்கும்.

குடும்பத்தில் மகிழ்ச்சிக்குக் குறை இருக்காது. கணவன் - மனைவி இடையே அன்பு நீடிக்கும். ஆனாலும் ஆண்டின் பிற்பகுதியில் குடும்பத்தில் ஒரு வித சலசலப்பு இருக்கும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. தடைப்பட்டு வரும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் செப்ரெம்பர் மாதத்திற்குப் பிறகு நடக்கும். சிலர் சற்று முயற்சி எடுத்து புதிய வீடு வாங்கலாம். வேலை விஷயமாகக் குடும்பத்தை வெளியூர் மாற்றவேண்டிவரும்.

உத்தியோகம் பார்ப்பவர்கள் தற்போது சுமாரான பலனையே கண்டுகொண்டிருப்பீர்கள். இடர்பாடும், பிரச்சினையும் தான் வாழ்க்கையே என்றுகூட எண்ணத் தோன்றி இருக்கும். கவலையை விடுங்கள். செம்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு காலம் கனிந்து வருகிறது. எத்தனை பிரச்சினைகள் வந்தாலும் குருவின் பார்வையால் அதனை முறியடிப்பீர்கள். முயற்சி எடுத்தால் பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவை கிடைக்கும். மேல் அதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும். வியாபாரம் சிறப்பாக நடக்கும். லாபம் அதிகரிக்கும். ஆண்டின் தொடக்கத்தில் எதிரிகளின் தொல்லை அதிகமாக இருக்கும். ஜூன் மாதத்திற்குப் பிறகு அவர்களின் சதி எடுபடாமல் போய்விடும். ஆனால், அதன்பின் தொழிலில் தீவிர கவனம் செலுத்தவேண்டும். வாடிக்கையாளர்களைத் தக்கவைத்துக் கொள்ளுங்கள். குறைந்த முதலீட்டில் புதிய தொழில் தொடங்கலாம். பண விஷயத்தில் அதிக கவனம் தேவை. யாரை நம்பியும் பணத்தை ஒப்படைக்கவேண்டாம்.

கலைஞர்களுக்குப் பொருளாதார ரீதியில் எந்தவித குறையும் இல்லாவிட்டாலும் மனதில் ஒருவித நெருடல் இருக்கும். திறமைக்கேற்ப மதிப்பு, புகழ் இல்லையே என்ற கவலை குடிகொண்டு இருக்கும். ஆண்டின் இறுதியில் அந்த எண்ணம் மறையும். புகழ், பாராட்டுக் கிடைக்கும். அரசியல்வாதிகள், பொது நலன் சேவகர்களும் ஆண்டின் பிற்பகுதியில் நல்ல வளத்தைக் காணலாம்.

மாணவர்களுக்குத் தற்போது சுமாரான காலம்தான். சிரத்தை எடுத்துப் படிக்கவேண்டும். ஆசிரியர்களின் ஆலோசனையைக் கேட்டுப் பெறவும். ஆனால், அடுத்த கல்வியாண்டு ஓரளவு சிறப்பாக இருக்கும். சிலர் வெளிநாடு சென்று படிக்கும் வாய்ப்பைப் பெறலாம். விவசாயிகள் நல்ல வருமானத்தைக் கண்டுகொண்டிருப்பீர்கள். கரும்பு, எள், கொள்ளு, பயறு வகைகள் போன்றவற்றில் நல்ல விளைச்சலைக் காணலாம். ஆண்டின் பிற்பகுதியில் அனைத்து தானிய வகைகளும் செழிக்கும். சிலர் சிரத்தை எடுத்துப் புதிய சொத்து வாங்கலாம். பெண் கள் எண்ணற்ற நல்ல பலன்களைக் காண் பீர்கள். புத்தாண்டில், அணிகலன்கள் உட்பட ஆடம்பரப்பொருள்களை வாங்கலாம். ஆண்டின் பிற்பகுதி விருந்து, விழா என உல்லாசமாகக் கழியும். உடல் நலம் சுமாராக இருக்கும். பித்தம், மயக்கம் போன்ற உபாதைகள் வரலாம்.

பரிகாரமாக சனிக்கிழமை தோறும் சனி பகவானுக்கு நல்லெண்ணைத் தீபம் ஏற்றுங்கள். வியாழக்கிழமை தட்சிணாமூர்த்திக்கு அர்ச்சனை செய்யுங்கள். ஞானிகள் ஆசான்களுக்கு இயன்ற பணிவிடை செய்யுங்கள். ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

## விருச்சிகம்

விருச்சிக ராசி அன்பர்களே! இந்த ஆண்டு கேதுவின் பலத்தால் சிறப்பானதாக அமையும். அவர் 11ஆம் இடத்தில் ஆண்டு முழுவதும் நற்பலனைக் கொடுப்பார். அவரோடு இணைந்திருக்கும் குருவும் பல்வேறு முன்னேற்றத்தைக் கொடுப்பார். ஆனால். அவர் செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்திற்கு வந்துவிடுவார். அதன்பின் அவரால் நன்மை தரமுடியாது. அதன்பின் அவர் இடப் பெயர்ச்சியைத் தருவார். மற்ற முக்கிய கிரகங்களான ராகுவும் சனியும் இந்த ஆண்டு நன்மை தரமாட்டார்கள். ராகு 5ஆம் இடத்தில் இருப்பதால் மனைவி வகையில் சிற்சில பிரச்சினைகளை உருவாக்கலாம்.

சனி பகவான் தற்போது உங்கள் ராசிக்கு 8ஆம் இடத்தில் உள்ளார். அஷ்டமத்தில் இருப்பது அவ்வளவு சிறப்பானது அல்ல. இதனால் அவர் உறவினர்கள் வகையில் பிரச்சினையைத் தரலாம். அவர் ஜூன் மாதம் 26ஆம் தேதி 9ஆம் இடத்திற்கு மாறுகிறார். அதன்பின் அவர் அஷ்டமத்தைப் போல் இடையூறைத் தரமாட்டார். ஆனாலும், தொழிலில் பிரச்சினையைத் தரலாம். இது தவிர சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன், சந்திரன் ஆகியோர் அவ்வப்போது நன்மை தருவார்கள்.

நீங்கள் நினைத்த காரியங்கள், எடுத்த செயல்கள் அனைத்தும் சிறப்பாக நிறைவேறும். சனியால் இருந்து வரும் தடைகள் ஜூன் மாதத்திற்கு பிறகு குறையும். பொருளாதாரத்தில் எந்த வித குறையும் இருக்காது. மதிப்பு, மரியாதையும் தொடர்ந்து சிறப்பாக இருக்கும். ஆண்டின் தொடக்கத்தில் வீடு, மனை, நிலம்வாங்க யோகம் உண்டு. சிலர் வசதியான வீட்டிற்குக் குடிபோகலாம்.

குடும்பத்தில் மகிழ்ச்சி நீடிக்கும். தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். விருந்து, விழா என்று சென்றுவருவீர்கள். உங்களின் செயல்பாட்டிற்கு பெண்கள் உதவிகரமாக இருப்பார்கள். ராகு சிறப்பாக இல்லாததால் மனைவி வகையில் சிற்சில பிரச்சினைகள் வரலாம். சற்று விட்டுக் கொடுத்துப் போகவும். உறவினர்கள் வகையில் இருந்துவரும் தொல்லைகள் ஜூன் 26ஆம் திகதிக்குப் பிறகு மறையும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் கைகூடும். நல்ல வரனாக அமையும். குழந்தை பாக்கியம் பெறுவர்.

உத்தியோகம் பார்ப்பவர்கள் சிறப்பான முன்னேற்றம் காணலாம். மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பையும் பெறலாம். பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். வேலையின்றி இருப்பவர்கள் வேலை கிடைக்கப் பெறலாம். சிலர் வேலை நிமித்தமாக குடும்பத்தை விட்டுப் பிரிய வேண்டியிருக்கும். செப்ரெம்பர் மாதத்திற்குப் பிறகு வேலைப்பளு அதிகரிக்கும். வேலையில் சற்றுக் கவனமாக இருக்கவேண்டும்.

வியாபாரம் செய்வோர் தற்போது உங்களுக்கு வளர்முகமான காலமே. ஆனால், அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். ஜூன் மாதத்திற்கு பிறகு பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆனால், சிலருக்கு வேலையில் தொய்வு ஏற்படலாம். அரசிடம் எதிர்பார்த்த சலுகை தீவிர முயற்சி எடுத்தால் கிடைக்கும். வேலையின்றி இருப்பவர்கள் ஜூன் மாதத்திற்குப் பிறகு குறைந்த முதலீட்டில் தொடங்கலாம். பொருள் விரயம் இருக்கும். எனவே, யாரையும் நம்பி பணத்தை ஒப்படைக்க வேண்டாம்.

கலைஞர்கள் சிறப்பு அடைவர். புதிய ஒப்பந்தம் கிடைப்பதில் தடை ஏதும் இல்லை. புகழ், பாராட்டுக் கிடைக்கும். அரசிடம் இருந்து விருது, பரிசு கிடைக்கும். செப்ரெம்பர் மாதத்திற்குப் பிறகு சற்று சிரத்தை எடுத்து முன்னேற வேண்டியிருக்கும். தொழிலில் போட்டி இருக்கும். மாணவர்கள் தொடர்ந்து முன்னேற்றம் காணலாம். நல்ல மதிப்பெண் கிடைக்கும். மேல் படிப்பில்விரும்பிய பாடம் கிடைக்கும். ஆனால், அடுத்த கல்வி ஆண்டு சுமாராகவே இருக்கும்.

விவசாயிகள் ஆண்டின் தொடக்கத்தில் புதிய நிலம் வாங்கலாம். நெல், கோதுமை, சோளம், கேழ்வரகு, மஞ்சள் போன்ற பயிர்களில் நல்ல விளைச்சலைக் காணலாம். ஆனால், கரும்பு, எள் போன்றவற்றில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்காது. விவசாயத்தோடு பக்கத் தொழில் நடத்துபவர்கள் நல்ல முன்னேற்றம் காணலாம். கூலி வேலை செய்பவர்கள் மன நிம்மதியுடன் காணப்படுவர்.

பெண்கள் உயர்ந்த நிலையில் இருப்பர். பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். உழைக்கும் பெண்கள் உயர்த்தப்படுவர். குடும்ப முன்னேற்றத்திற்கு ஓர் அங்கமாகத் திகழ்வீர்கள். கணவர் மற்றும் குடும்பத்தாரின் நன்மதிப்புக் கிடைக்கும். ஆண்டின் பிற்பகுதியில் சிற்சில விடயங்களில் விட்டுக்கொடுத்துப் போகவும்.

வழக்கு விவகாரங்கள் சிறப்பாக இருக்கும். ஜூன் மாதத்தில் இருந்து செப்ரெம்பர் மாதம்வரை தீர்ப்புகள் வந்தால் சாதகமானதாக இருக்கும். புதிய வழக்குகள் எதிலும் சிக்கவேண்டாம். உடல் நலம் சிறப்பாக இருக்கும். மருத்துவ செலவு குறையும். தூரத்து உறவினர் வகையில் இருந்து விரும்பத்தகாத செய்தி வரலாம். சனியும், ராகுவும் ஆண்டு முழுவதும் சாதகமாகக் காணப்படவில்லை. எனவே, சனிக்கிழமை பெருமாள் கோயிலுக்குச் சென்று வாருங்கள். ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள். பத்திரகாளி அம்மனை வணங்கி வாருங்கள். வயதான மூதாட்டிக்கு புடைவை எடுத்துக் கொடுங்கள். செப்ரெம்பர் மாத்திற்கு பிறகு வியாழக்கிழமை தட்சிணா மூர்த்திக்கு அர்ச்சனை செய்யுங்கள்.

(வளரும்)

## புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல. 3விடைகள்

கடந்த செவ்வாய்க்கிழமை உதயனில் வெளியான ஐந்தாம் தரத்துக்குரிய - புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.3 இற்கான விடைகள் வருமாறு:

வினாத்தாள் - I

(01) 2 (02) 3 (03) 3 (04) 3 (05) 1
(06) 1 (07) 3 (08) 3 (09) 4 (10) 2
(11) 3 (12) 2 (13) குளிர் (14) ஒளி
(15) 4 (16) 2 (17) 2 (18) 3 (19) 2
(20) 1 (21) பிழை (22) சரி
(23) A,F (24) 3 (25) 1 (26) 3
(27) 2 (28) (1)10 (29) (3)27 (30) 3
(31) 2 (32) 2 (33) 1 (34) 2 (35) 3
(36) 3 (37) 2 (38) 1 (39) 2 (40) 3

வினாத்தாள் - II

(01)
1) காற்றுக்கு
2) மான்போல / காற்றாய்ப் பறந்து வந்த
3) அரசசார்பற்ற நிறுவனம்
4) மிக வேகமாகச் செல்லுதல்
5) உதவி செய்தல்
6) மூச்சுப் பேச்சு / தாறுமாறாக
7) விதவை / கைம்பெண்
8) பாதை / வழி / தெரு
9) வைத்தியம் 10) குருதி
11) பாதை 12) அலங்கோலம்
13) இறக்கி 14) பல
15) தாய்மார் 16) மோதின
17) வாகனங்கள்
18) கிடந்தாள் / வந்தாள் / திகைத்தாள்
19) மோதியது 20) Twelve
21) Blood 22) First Aid
23) Hospital
(02)
1. சிறுவன் பந்து அடித்தான்
2. உனது பெயர் என்ன?
3. நான் தமிழ், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் படித்தேன்.
(03)
1) 2 2) 3 3) 1 4) 3 5) 4
(04)
1) சீனப்படம்
2) விளையாட்டுக் காற்றாடி / பம்பரவிசிறி
3) காந்தப் பாம்பு
(05)
1) கேட்பவன் 2) பார்வையாளன்
3) வாசகன் 4) எழுத்தாளன்
(06)
1) 5 2) 2 3) 1 4) 4 5) 3
(07)
1) விளையாட்டுப்போட்டி
2) கிளிகள் 3) பச்சை
4) மிக நன்று / மிகவும் நல்லது
5) காடு
(08)
1) வேர் / வேர் மயிர்கள்
2) கற்பூரவள்ளி 3) புரதம்
(09)
1) 2050g 2) 8 மணித்தியாலயம்
3) 1m 35cm 4) 3/4
5) 2
(10)
1) Puppy 2) Where
3) Your 4) Yesterday
5) Night
(11)
1) மல்லி 2) கபு (ட்)டா
3) அச 4) இற
(12)
1) 6 2) 11
(13)
1) ஊதா 2) பச்சை
(14)
1) 37 ரூபா 50 சதம்
2) 1 kg 300g 3) ரூபா 113.50
4) 10 ரூபா 5) 1 ரூபா 50 சதம்
6) 18 ரூபா
7) 386 ரூபா 50 சதம்
(15)
பொருத்தமான வசனங்கள்

புள்ளித்திட்டம்

வினாத்தாள் I :
40x2 ½ = 100 புள்ளி

வினாத்தாள் II :
1) 23 புள்ளி 6) 5 புள்ளி 11) 4 புள்ளி
2) 3 புள்ளி 7) 5 புள்ளி 12) 2 புள்ளி
3) 5 புள்ளி 8) 3 புள்ளி 13) 2 புள்ளி
4) 3 புள்ளி 9) 10 புள்ளி 14) 14 புள்ளி
5) 4 புள்ளி 10) 5 புள்ளி 15) 12 புள்ளி

## இறை உணர்விற்கும், கலையுலகுக்கும் பெருமை சேர்க்கும் நடராஜர் திருவுருவம்

சிவபெருமான் கொண்டருளிய மூர்த்தங்களுள் தலைமையும், பெருமையும் உடையது நடராச மூர்த்தம். உடலை இயக்கும் இதயத் துடிப்புப் போல உலக இயக்கத்திற்கும் நடராசப் பெருமானது தாண்டவம் துணைபுரிகிறது.

நடராசப் பெருமான் இத்திருநடனத்தால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்கிறார். ஆதலால், இந்நடனம் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம் எனப்படும். நடராசப் பெருமானின் திருவுருவம் உலக மக்களைக் கவர்ந்ததுபோல் வேறெந்த உருவமும் கவர்ந்ததில்லை.

ஆடல்வல்லானின் 108 தாண்டவங்களையும், ஏனைய நிருத்தங்களையும் புராண, நாட்டிய, திருக்கோயில் வரலாறுகளிலும் விரிவாகக் காணமுடியும. சிவபெருமான் இந்த 108 நடன வகைகளையும் ஆடிக் காட்டியுள்ளார்.

அழகின் இருப்பிடமாகவும், அரிய பெரிய கருத்துக்களை விளக்கும் நிலையிலும், கவர்ச்சியின் தோற்றமாகவும், நிறைவான மகிழ்ச்சியின் உருவமாகவும், பண்பாட்டின் உச்ச நிலையாகவும், நாகரிகத்தின் சான்றாகவும் விளங்கும் இத்திருவுரு இதன் துலக்கம் காலூன்றும் விதம, கால்மாறி நடனம் ஆடும் நிலை, எடுப்பான போக்கு, ஒளி வீசும் ஞானக்கண்கள், சிறப்பான சிற்ப வடிவு, இசை, நாட்டியம் ஒருங்கமைந்த தன்மை, நவீன விஞ்ஞானம், மெய்ஞ்ஞானமும்

### ஞானக்கதிர்

சங்கமிக்கும் இடமாகத் தோற்றம் தருகிறது நடராசப் பெருவடிவம்.

முன்னொருகால் இறைவனின் ஆனந்த தாண்டவத்தைத் தரிசிக்க தில்லையில் தேவர்கள், இந்திரன், பிரம்மா, விஷ்ணு, தில்லை மூவாயிரவர்., பதஞ்சலி, உபமன்யு, வியாக்கிரபாதர் போன்ற முனிவர்களும் கூடியிருந்தனர். ஆனந்தத் தாண்டவத்தைக் காண அவாவுற்ற நிலை



யில், நந்தியம் பெருமான் கையில் பிரம்புடன் தோன்றினார்.

பொ.சிவப்பிரகாசம்
கொழும்புத்துறை மேற்கு

இறைவனின் ஆனந்தத் தாண்டவம் காண வந்தவர்களை அவரவர்க்கு ஏற்ற இடத்தில் அமரச் செய்தார். தேவதுந்துபிகள் முழங்கின. பதினைந்து நாழிகை ஆனதும் ஞான சபையிலே ஒளிவடிவமான வெளியில் கருணை வடிவமான உமாதேவியாருடன் எம்பெருமான் காட்சி தந்தார். அனைவரும் தலைமீது கரங்குவித்து 'சிவசிவ' என்றனர்.

புன்முறுவல் பூத்த திருமுகம் மூன்று கண்கள் கங்கை, பிறை கொன்றை மாலையுடைய சடையும், சங்ககுண்டலம் திருத்தோடு உடைய செவியும், திருநீலகண்டமும், தமருகம், அபயகரமும், அக்கினியுடனும், புலித்தோலாடையும, முயலகன் மேல் ஊன்றிய பாதமும், எம்பெருமானின் வலக்கை தமருகத்தை ஒலித்துக் கொண்டு சிவகாமி அம்மையார் காண ஆனந்த நடனம் ஆடினார்.இறைவன் கால்களில் வேதம் என்னும் சிலம்பு ஒலித்தது.

இந்த ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசித்த கண்களுக்கு வேறு காட்சியும் வேண்டுமோ?

அதிர்ஷ்ட சீட்டிழுப்பு

# வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் !

## வடக்கு, கிழக்கு வெற்றியாளர்கள்

## டிசம்பர் 2004 - ஜனவரி 2005

### 4 கிராம் தங்க நாணய வெற்றியாளர்கள்

| பெயர் | MTCN இல. | MMBL முகவர் நிலையம் |
|---|---|---|
| K. வீரகாந்தி | 1792662862 | குமார் ஏஜன்ட் யாழ்ப்பாணம |
| T. மாணிக்கம் | 7166204808 | குமார் ஏஜன்ட் யாழ்ப்பாணம் |
| P. ஜெயநீவாணி | 3907942689 | குமார் ஏஜன்ட் யாழ்ப்பாணம் |
| K. ஜெயராஜன் | 1433872770 | குமார் ஏஜன்ட் யாழ்ப்பாணம் |
| L. ஜெகநாதன் | 0611526205 | குமார் ஏஜன்ட் யாழ்ப்பாணம் |
| F.R.M.B. ஞானரத்னம் | 2440905722 | தினேஷ் வெதுப்பகம் மாணிப்பாய் |
| S. மலைத்தேவி | 5333118794 | மஹாலக்மி ஸ்டோர்ஸ் யாழ்ப்பாணம் |
| V. நவரத்னம் | 1046274364 | கணேஷா ஏஜன்சி பருத்தித்துறை |
| K. பிரேமகரன் | 1948395476 | கணேஷா ஏஜன்சி பருத்தித்துறை |
| M. பரமசோதி | 9030267621 | கணேஷா ஏஜன்சி பருத்தித்துறை |
| T.T. அஸ்தக்கி | 7377873690 | கணேஷா ஏஜன்சி பருத்தித்துறை |
| M. நாகரத்னம் | 4173148375 | நீதினி முகவர் தபால் நிலையம் சுன்னாகம் |
| A.S.R. சுஜாதா | 8480826760 | யோகா கொமினிகேஷன் திருநெல்வேலி |
| C. நாகமுத்து | 8127595877 | ஓம் சரவணபவ கொம்யூனிகேஷன் பொலிகண்டி |
| J. ஜீவராசா | 2670421879 | கோபி ஏஜன்சி வவுனியா |
| J.R. யோகேஸ்வரன் | 6543010040 | கோபி ஏஜன்சி வவுனியா |
| T. ஐயம்பிள்ளை | 3193955582 | கோபி ஏஜன்சி வவுனியா |
| S. தம்பு | 9542891644 | கோபி ஏஜன்சி வவுனியா |
| A. அல்.:பட் | 5965849618 | அம்பால் ஏஜன்சி வவுனியா |
| M. சுதன் | 6793874512 | லேசர் ஸ்டேஷனர்ஸ் திருகோணமலை |
| W.J. சண்முகநாதன் | 7329033842 | லேசர் ஸ்டேஷனர்ஸ் திருகோணமலை |
| S. யோகராஜா | 4166212416 | லேசர் ஸ்டேஷனர்ஸ் திருகோணமலை |
| M. மனோஹரன் | 6075473371 | ஈஸ்வரி முகவர் தபால் நிலையம் மட்டக்களப்பு |

### 50 கிராம் கோல்ட் பார் வெற்றியாளர்

| பெயர் | MTCN இல. | MMBL முகவர் நிலையம் |
|---|---|---|
| S. செல்லையா | 6360318661 | கோபி ஏஜன்சி வவுனியா |

### 20 கிராம் கோல்ட் பார் வெற்றியாளர்கள்

| பெயர் | MTCN இல. | MMBL முகவர் நிலையம் |
|---|---|---|
| E. ரத்னசிங்கம் | 2791053636 | மஹாலக்ஷ்மி ஸ்டோர்ஸ் யாழ்ப்பாணம் |
| L. ஆறுமுகம் | 6263253131 | மஹாலக்ஷ்மி ஸ்டோர்ஸ் யாழ்ப்பாணம் |

### 10 கிராம் கோல்ட் பார் வெற்றியாளர்கள்

| பெயர் | MTCN இல. | MMBL முகவர் நிலையம் |
|---|---|---|
| P. செல்லத்துரை | 2957987990 | மஹாலக்ஷ்மி ஸ்டோர்ஸ் யாழ்ப்பாணம் |
| V. சந்திரகாந்தன் | 1610852107 | மஹாலக்ஷ்மி ஸ்டோர்ஸ் யாழ்ப்பாணம் |
| M. சந்தியாபிள்ளை | 3240401684 | குமார் ஏஜன்ட் யாழ்ப்பாணம் |
| F.X. செபமாலை | 4606080178 | கணேஷா ஏஜன்சி பருத்தித்துறை |
| P. சௌந்தரராஜன் | 7663602711 | கணேஷா ஏஜன்சி பருத்தித்துறை |
| S. செல்வராஜா | 8902751477 | அம்பால் ஏஜன்சி வவுனியா |
| J. சந்தனமரியன் | 5773690592 | அம்பால் ஏஜன்சி வவுனியா |
| S.கனகமணி | 6931269319 | கோபி ஏஜன்சி வவுனியா |
| M. லதா | 7860669983 | லேசர் ஸ்டேஷனர்ஸ் திருகோணமலை |


FLEX Graphic

AUTHORISED AGENT

MMBL
Money Transfer (Pvt) Ltd.
300, Galle Road, Colombo 3.
**HOTLINE: 011 2372 333**

• அநேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்

**WESTERN UNION**
**MONEY TRANSFER**




நீங்களும் இப்படித்தான் நினைக்கிறீர்களா?
திருமணம் ஆனதும், உங்களுக்கு விருப்பமானதை விரும்பிய நேரத்தில் உங்கள் துணையின் விருப்பமில்லாமல் செய்யலாம் என்று நினைக்கிறீர்களா? அவளுடைய விருப்பமில்லாமல் நீங்கள் அடையும் பாலியல் திருப்தி, அவளுக்கு நரகவேதனையாக அமையும் என்பதை நினைத்துப் பார்க்கிறீர்களா?

திருமணமானாலும் பாலுறவுப் பலாத்காரம் பாரதூரமான குற்றம் என்பதை அறிவீர்களா?

**நீங்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவே!**
**வாழ்க்கை இனிமையாக வாழ்வதற்கே!**
**சித்திரவதைப் படுவதற்கு அல்ல!**

**உங்களால் மற்றொருவர் மனம் சித்திரவதைப் பட்டுத் துன்பப்படுகிறதா என்பதை யோசித்துப் பாருங்கள்.**
**வன்முறைகள் இல்லாத இல்லத்தை உருவாக்க நீங்களும் உதவுங்கள்**

**இல்லத்து வன்முறைகளை இல்லாதொழிக்க ஒன்றிணைவோம்.**

THOMPSON ASSOCIATES

எச்சரிக்கை: திருமணம் என்பது பாலியல் துன்புறுத்தலுக்கான அனுமதிப்பத்திரம் அல்ல.

நாம் இணைந்து
பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்போம்

பெண்கள் மீதான
வன்முறைகளை இல்லாதொழிக்கும்
இலங்கைப் பிரசாரத்திட்டம்
த.பெ. 2006, கொழும்பு.

# ஊடகவியலாளர்களின் பணிக்கு இடையூறு களைய நடவடிக்கை

தென்மராட்சி,ஏப்.15

எதிர்காலத்தில் ஊடகவியலாளர்களின் பணிக்கு பொலீஸாரோ அல்லது படையினரோ இடையூறு விளைவிக்காதிருக்க நடவடிக்கை மேறகொள்ளப்படும். இவ்வாறு பொலீஸ்மா அதிபரின் விசேட பிரதிநிதியான உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் எச்.எம்.தர்மசேன தலைமையிலான குழுவினர் உறுதியளித்துள்ளனர்.

கொடிகாமத்தில் படையினரின் தண்ணீர்த் தாங்கி வாகனம் மோதி மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் பலியான சம்பவம் சமீபத்தில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் கலவரம் ஏற்பட்டது. இதுகுறித்த செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்கள் மீது பொலீஸாரும் படையினரும் தாக்குதல் நடத்தினர் என்று கூறப்பட்டது. இது தொடர்பாக விசாரணை நடத்த,மேற்படி குழுவினர் வந்திருந்தனர்.

ஆசியாவுக்கான மனித உரிமைகள் ஆணைக் குழுவின பணிப்புக்கமைய இலங்கை பொலீஸமா அதிபரின் விசேட பணிப்பின் பேரில் இந்த விசாரணைக்குழுவினர் யாழ்.பொலீஸ் அலுவலகத்தில் வைத்து விசாரணைகளை நடத்தினர்.

பொலீஸார் மற்றும் படையினரால் தாக்குதலுககுள்ளான செய்தியாளர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களின் வாக்கு மூலங்களை எழுத்து மூலம பெற்றபின்னர் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் எச்.எம். தர்மசேன தலைமையிலான குழுவில் தேசிய விசேட புலனாய்வுப் பிரிவு அதிகாரி சமரசிங்க, யு.பி.எல்.பெரேரா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். (ஒ-117)

## கட்டாக்காலி நாய் பிடித்தழிக்க ஊக்குவிப்புப் படியாக 50ரூபா

யாழ்ப்பாணம்,ஏப்.15

கட்டாக்காலி நாய்களைப்பிடித்து அழிக்கும் நடவடிக்கையின் போது, ஒவ்வொரு நாய்ககும் ரூபா 50 வீதம் தொழிலாளிக்கு வழங்க வேண்டும்.

- இவ்வாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா சகல உள்ளூராட்சிச் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

குடாநாட்டில் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துள்ளன. இதனால், நாய்க்கடியால் பாதிப்படைவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. ஆகவே, கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்க வேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

இந்நிலையில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் சுகாதாரத் தொழிலாளருக்கு ஆகக் குறைந்த ஊக்குவிப்புப் படியாக நாய் ஒன்றைப் பிடித்தழிக்க ரூபா 50 வழங்கப்படல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு யாழ்.மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உளளூராட்சி உதவியாளர்கள், சபை செயலாளர்கள் ஆகியோர் பங்கேற்ற கட்டாக்காலி நாய்கள அழிப்புத் தொடர்பான கூட்டத்தில் ஒவ்வொரு நாய்க்கும் 100 ரூபா வழங்கப்பட வேண்டும் என கோரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-185)

## மின்னல் தாக்கி கட்டடம் சேதம்!

கரவெட்டி,ஏப்.15

கடநத திங்கட்கிழமை இரவு பருத்தித்துறை பொதுச்சந்தைப் பகுதியில் மின்னல் தாக்கி மதிலும் கிணறும் சேதத்திற்குள்ளாகின. அன்று நள்ளிரவு பலத்த இடி மின்னலுடன் கூடிய மழை பெய்தது. அவ்வேளை, பருத்தித்துறை பொதுச சந்தைக் கட்டடத்தினுள் மின்னல் தாக்கியது. இதல் சந்தையின் தடுப்புச் சுவரும் கிணறு ஒனறும் பலத்த சேதமடைந்தன. அத்துடன் அயலில் உள்ள பொதுமகன் ஒருவரின் வெற்றிலைத் தோட்டத்திலும் சேதம் ஏற்பட்டது. (ஒ-70)

### யாழ்.போதனா வைத்தியசாலையில்

## பிரேத அறை, சமையலறைக்கு புதிய கட்டடங்கள் அமையும்

யாழ்ப்பாணம்,ஏப்.15

யாழ்.போதனாவைத்தியசாலையில் நவீன முறையிலான பிரேத அறைக் கட்டடமும் சமையல்அறை கட்டடமும் புதிதாக அமைக்கப்படவிருக்கின்றன.

யாழ்.மருத்துவமனையில் இறந்தவர்களின் சடலங்களை வைப்பதற்கு போதிய அளவு வசதிகள் இல்லை என்றும் - இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகம் சுகாதார அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வந்தது என்றும் - தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து சுகாதார அமைச்சு சுமார் 30 மில்லியன் ரூபா செலவில் நவீன முறையிலான 'கூலர்' பிரேத அறை ஒன்றையும் மறறும் சமையல்அறை ஒன்றையும் அமைப்பதற்கு நிதி ஒதுக்கியுள்ளது.

பிரேத அறை இரண்டு மாடிக்கட்டடங்களைக் கொண்டதாக அமையவுள்ளது.

இந்த அறையில் மேல் கட்டடப் பகுதியில் சட்ட வைத்திய அதிகாரியின் அலுவலகம் இயங்கும். கீழ்ப்பகுதி இறந்தவர்களின் சடலங்கள் வைப்பதற்குப் பயன்படுத்தப்படும்.சுமார் 36 சடலங்களை அங்கு அறவைப்பதற்கு ஏற்றவகையில் அமைக்கப்படவுள்ளது. கட்டடப் பணிகள் தற் போது நடைபெற்று வருகின்றன என்றும்-

பணிகள் பூர்த்தியானதும் அடுத்த வருடம் தொடக்கம் புதிய கட்டடங்களில் இவை இரண்டும் இயங்கும் என்றும் -

யாழ்.ஆஸ்பத்திரியின் நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.பத்மநாதன் தெரிவித்தார். (ஒ-7)

## சட்டவிரோத மின் பாவனை; ஆறு பேருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.15

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டின்பேரில் ஆறு பேருக்கு மல்லாகம் நீதிமன்றம தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு சுன்னாகம் மின் அத்தியட்சகர் அலுவலக அதிகாரிகளும் தெல்லிப்பழைப் பொலீஸாரும் இணைந்து அளவெட்டி, மல்லாகம், மாகியப்பிட்டி ஆகிய பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்போது இவர்கள் 6 பேரும் சிக்கினர் என்று சுன்னாகம் மின் அத்தியட்சகர் எஸ்.நாகராஜா தெரிவித்தார்.

மல்லாகத்தைச் சேர்ந்த இருவர், அளவெட்டியைச் சேர்ந்த இருவர், மாகியப்பிட்டியைச் சேர்ந்த இருவரும் என ஆறுபேர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது இவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. (ஒ-7)

## தளபாடப் பற்றாக்குறையினால் கல்விச் செயற்பாட்டுக்குத்தடை

யாழ்ப்பாணம்,ஏப்.15

பாடசாலை நூலகக் கல்விக்கும் பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கும் போதிய தளபாடங்கள் இல்லாமை பெரும் குறையாகவுள்ளது.

- இவ்வாறு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் திருமதி சந்திராதேவி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

பாடசாலை வளர்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடு குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலையில் இன்றைய கல்வித் தேவைக்கு ஏற்றவாறு நாம் மாணவர்களின் கல்விச் செயறபாட்டுக்குத் தேவையானவற்றை வழங்க முன்வரவேண்டும். அந்த வகையில் முதற்கட்டமாக பாடசாலைக்குத் தேவையான மேசை, கதிரை போன்ற தளபாடங்கள் மற்றம் உபகரணங்கள் வழங்கப்படவேண்டும். இதற்கேற்ற விதத்தில் விரைவில் வலயக் கல்விப்பணிப்பாளர், மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் ஊடாக யாழ். அரச அதிபருக்கும், 'நிகொட்' மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளருக்கும் முன்மொழிவு திட்டங்களை அனுப்பி வைக்கவுள்ளோம் - என்றார் அவர். (ஒ-185)

## தபாலகக் கட்டடத்தை மீளளிக்க உரிமையாளர் கோரிக்கை

வலி.தெற்கு,ஏப்.15

சுன்னாகம் தபாலகம் இயங்கி வரும் கட்டடத்திலிருந்து இம்மாதம் 15ஆம் திகதியுடன் இன்று வெளியேறுமாறும் -

இல்லாவிட்டால் தாம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாகவும் - அக்காணியின் உரிமையாளர் அறிவித்துள்ளார் என்று சுன்னாகம் தபாலதிபர் ஐயாத்துரை லோகஞானம் தெரிவித்தார்.

சுன்னாகம் தபாற்கந்தோர் காணிக்கட்டடத்தைக் கொள்வனவு செய்வது தொடர்பாகச் சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அ.தற்பரானந்தன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மேற்படி காணிக் கட்டடத்தை கொள்வனவு செய்வது தொடர்பாக ஆராயப்பட்டது.

தபாற்கந்தோர் காணிக் கட்டட உரிமையாளர், காணியை விட்டு வெளியேறுமாறு தபால் திணைக்களத்துக்கு விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பிரதித் தபால் அதிபர் மேற்படி காணியை விட்டு, தபாற் கந்தோரை வேறு இடத்துக்கு மாற்றுமாறு அறிவித்துள்ளார் என்று சுன்னாகம் தபாலதிபர் கூட்டத்தில் தெரிவித்தார்.

இதேவேளை, மேற்படி காணிக் கட்டடத்தை கொள்வனவு செய்வதற்கு நிதி திரட்டுவதற்காக தெரிவு செய்யப்பட்ட சபையினர் சுனாமி அனர்த்தத்தால் ஒத்திவைக்கப்பட்ட தமது பணியை விரைவில் மீண்டும் முன்னெடுக்க உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-152)



தீவக லயன்ஸ் கழகத்தினால் அண்மையில் எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்திற்கு ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. தீவக லயன்ஸ் கழகத் தலைவர் கு.அருணகிரிநாதன் நூல்களைப் பாடசாலை அதிபர் தி.சிவபாலனிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)

### கல்விக் கண்காட்சி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டினை ஊக்குவிக்கும் கல்விக் கண்காட்சி பாடசாலை மற்றும் வலய மட்டத்தில் நடத்தப்படவுள்ளது.

பாடசாலை மட்டத்திலான போட்டிகளை எதிர்வரும் மே 31ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி வெற்றி பெறும் ஆக்கங்களின் விவரங்களை இரு பிரதிகளில் தயாரித்து வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் வலய மட்டப் போட்டியில் காட்சிப்படுத்தப்படுமெனவும் -

இப்போட்டியில் தெரிவு செய்யப்படும் முதல மூன்று இடங்களைப் பெறும் ஆக்கங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுமெனவும் -

வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (ஒ-117)

### நாடித்துடிப்பறியும் கருவி அன்பளிப்பு

நாடித்துடிப்புப் பார்க்கும் கருவி ஒன்றை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு யாழ். பொருளியல் கல்லூரியின் பணிப்பாளர் எஸ். வரதராஜன் அன்பளிப்புச் செய்துள்ளார்.

இந்த இயந்திரத்தை யாழ்.மருத்துவமனை எலும்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர் ஏ.உமாபதியிடம் பொருளியற் கல்லூரியின் பணிப்பாளர் கையளித்தார். இந்த இயந்திரம் 14ஆம் இலக்க வார்டில் பொருத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-7)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### சைக்கிள்கள் அன்பளிப்பு

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சைக்கிள்களை அன்பளிப்பாக வழங்கியது.

தமிழர் புனர்வாழ்வுக் கழக நோர்வேக் கிளையின் நிதியுதவியுடனும் யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய அனுசரணையுடனும் இந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டன. இதற்கான நிகழ்வு கடந்த 5ஆம் திகதி தம்பசிட்டி கிராம காந்தியூர் முன்பள்ளியில் இடம்பெற்றது.

முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய மக்கள் கட்டமைப்பு உபதலைவர் எஸ்.சிவச்செல்வன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ்.மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜும சிறப்பு விருந்தினர்களாக புலோலி கிராம அலுவலர் நாகதீப சோதிருபன், சமூக உத்தியோகத்தர் திருமதி லோகராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் வைத்து 30 முன்பள்ளி ஆசிரியர்களுக்குச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (ஒ-202)

### வினாடிவினாப் போட்டி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை கற்கும் மாணவரிடையே கணிதம் மற்றும் விஞ்ஞானபாட வினாடிவினாப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் சகல மாணவர்களையும் கலந்துகொள்ளச் செய்வதோடு, போட்டிகள் வாய்மொழிப் பரீட்சையாக நடத்தப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜூன் 15ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை மட்டப் போட்டிகளை நடத்தி வலய மட்டப் போட்டிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர், திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (ஒ-117-152)




கனடா நாட்டு சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைத் தொண்டர் குழு அண்மையில் யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் செய்தது. அப்போது யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் கல்லூரி கிற்றி மாணவர் முதலுதவி அணியினருக்கு முதலுதவிப் பெட்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

கனடா நாட்டின் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைத் தொண்டர் குழு அத்தியட்சகர் டிபெஸ்ற் லானன் இதனை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ்.மாவட்ட ஆணையாளர் எஸ்.செல்வரஞ்சன், உதவி மாவட்ட ஆணையாளர் எஸ்.அசோகன், யாழ்.மனித நேய அமைப்புகள் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.பரமநாதன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)

## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

# வெற்றிடங்கள்

1. பதவி: கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
   a) ஆண்கள் b) பெண்கள்
2. தகைமைகள்: க.பொ.த. (சாதாரண தரம்) சித்தி
3. வயது: 20 தொடக்கம் 55 வயது வரை
4. உயரம்: 5 அடி 4 அங்குலம்

குறிப்பு: 1. இளைப்பாறிய பொலிஸ் /படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை
அத்துடன்
சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை சாரணர்கள், விளையாட்டுத்துறை வீரர்கள்.
2. நல்ல கண்பார்வையும், தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

5. சம்பளம்: ரூபா 6000/= (மாதமொன்றுக்கு)
ரூபா 500 (வருகை ஊக்குவிப்பு)
மற்றும் E.P.F., E.T.F. உம் வழங்கப்படும்.

கிராமசேவை அலுவலரின் நற்சான்றுப்பத்திரம், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் 16.04.2005 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கீழ் உள்ள முகவரிக்கு சமுகமளிக்கவும்.

**- பணிப்பாளர்.**

கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை,
இல.807, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சி-42179)(42-11-15)


## 7 கோடி ரூபா துருக்கி உதவி

ஆழிப்பேரலை அழிவுகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரண மற்றும் மனித நேய உதவிப் பணிகளுக்காக துருக்கி அரசு ஏழுகோடி ரூபாவை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

நிதி வழங்குவதை உறுதிப்படுத்தும் கடிதம் இலங்கைக்கான துருக்கி தூதுவர் ஹஸன் போகஸ்ஸினால் திங்கட்கிழமை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஏற்கனவே, ஆழிப்பேரலையினால் பாதிககப்பட்ட மக்களுக்கான வீடமைப்புத் திட்டமொன்றை துருக்கி அரசு மாத்தறையில் நடைமுறைப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-3)


புத்தாண்டு வாழ்த்துக்கள்

THE MORE YOU HONOUR ME THE MORE I BLESS YOU

# பாலன்ஸ் மல்ரி சென்ரர் & லொட்ஜ்

குழந்தை இயேசுவின் ஆசியுடன் இன்று (15.04.2005) வெள்ளிக்கிழமை தனது 5 ஆவது வருட நிறைவைப் பூர்த்திசெய்கின்றது என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.



எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

★ கொம்பியூட்டர் ★ வலைப்பின்னல் ★ தொலைத் தொடர்பு ★ போட்டோக்கொப்பி ★ தொலைநகல் ★ கவர்அடித்தல் ★ கட்டடப்பொருள்கள்

இவை அனைத்தையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர்: பொ.ஜெயபாலன்
பாலன்ஸ் மல்ரி சென்ரர் & லொட்ஜ்
71(39), கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 222 3248, தொலைநகல் இல: 021 222 7299

(C-42297)(50-11-18)



தேவி மயம்

# பார்த்திப வருஷ பிரம்மோற்சவம்

## பருத்திநகர் கோட்டுவாசல்

# அம்பாள் திருக்கோயில்

கொடியேற்றம் – இன்று (15-04-2005) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி
தேர் உற்சவம் – (23-04-2005) சனிக்கிழமை காலை 8.30 மணி
சமுத்திரதீர்த்தம் – (24-04-2005) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணி.

மகோற்சவ குரு
**பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவ சிவாச்சாரியார்**
*(சிவாக வித்தியாசாகரன்)*
**நல்லூர் சட்டநாதர் சிவன் பிரதமகுரு,**
**இணுவில் சிவன் பிரதம குரு.**

ஆலய குரு
**பிரம்மஸ்ரீ இ.சுந்தரேஸ்வரசர்மா.**
சுபமஸ்து

முகாமையாளர்
ஏ.சந்திரமூர்த்தி.

நிர்வாகிகள்
வீ.ராமச்சந்திரன்,
சி.தீபாநந்.

(சி.42211)(46-11-15-42)



# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 - 05 - 1934



மறைவு 26 - 04 - 2004

அமரர் **வேலுப்பிள்ளை நடராஜா**
(சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும், J.P.U.M)
திதி: ஸப்தமி

ஆண்டு ஒன்று சென்றதுவோ
ஆறவில்லை எம் இதயம்!
மீளாத்துயில் கொண்ட எம் - அன்புத்தெய்வமே!
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

29, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (44113)(46-11-15)

**– குடும்பத்தினர்**



# இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

## Muthayamal Educational Institutions

RASIPURAM - 637 408, NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் **A/L** சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கிகரீக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலஎண்டுகள் | உட்பிரவேச தகமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Infomation Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் யூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

**Call: 011-4512591** for prospectus and application forms
SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06.
email : peter@scholars-info.com

# பாலம் பழுது

கிளிநொச்சி,ஏப்.15

கிளிநொச்சி நகரில் உருத்திரபுரம் பிரதான வீதியையும் கணேசபுரம் கிராமத்தையும் இணைக்கும் பாலம் நீண்டகாலம் புனரமைக்கப்படவில்லை.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் போது சிதைக்கப்பட்ட இப்பாலம் இன்றுவரை புனரமைக்கப்படவில்லை. இதனால், இப்பகுதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

புனித திரேசா பெண்கள் கல்லூரிக்குச் சென்றுவரும் மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் கணேசபுரம், பெரியபரந்தன் பகுதிகளுக்கு விவசாய நடவடிக்கைகளுக்காகச் செல்வோர் இப்பாலம் புனரமைக்கப்படாமையால் பெரும் பாதிப்பை அடைந்துள்ளனர். (ஒ-301-202)

# தேங்காய் மட்டையால் வீதி 'புனரமைப்பு'!

வேரவில்,ஏப்.15

வேரவிலிலிருந்து கிராஞ்சியூடான பல்வராயன் கட்டு வீதி 8 கிலோ மீற்றர் நீளமானது.

வலைப்பாடு, கீரிக்குடா, பொன்னாவெளி, வேரவில், மாதிரிக் கிராமம், மொட்டையன் குளம், கிராஞ்சி ஆகிய கிராமங்களிலுள்ள மக்களுக்குப் பிரதான போக்குவரத்துப் பாதை இதுவாகும்.

இவ்வீதி கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாமல் இருக்கிறது. தற்போது பெய்துவரும் மழை காரணமாக இவ்வீதி மேலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குன்றும் குழியுமாகக் காணப்படும் இடங்களை இப்பகுதி வாழ் மக்கள் தமது போக்குவரத்து வசதியைக் கருத்திற்கொண்டு தேங்காய் மட்டைகளால் நிரப்பி வருகின்றனர்.

இவ்வீதி குறித்து அதிகாரிகள் பாராமுகமாக இருக்கின்றனர் என இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (த-404)

# பாப்பரசருக்கு இரங்கற் திருப்பலி

மறைந்த பாப்பரசரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகக் கடந்த வெள்ளிக்கிழமை வலைப்பாடு புனித அன்னம்மாள் ஆலயத்தில் காலை 7.30 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியை அருட்தந்தை அன்ரன் றோக் நிகழ்த்தினார்.

இத்திருப்பலியில் வேரவில் இந்து மகா வித்தியாலயம், வலைப்பாடு றோ.க. பாடசாலை ஆகியவற்றின் ஆசிரியர்கள், மாணவர்கள், பங்குமக்கள், அருட்சகோதரிகள் எனப் பலரும் கலந்துகொண்டு செபித்தார்கள். அனைவரும் அன்றையதினம் கறுப்புப் பட்டி அணிந்து தமது துக்கத்தை வெளிப்படுத்தினர்.(ஒ-404)

# ஆசிரிய விடுதிகளின் புனரமைப்புக்கு நிதி

வேரவில்,ஏப்.15

கிளிநொச்சி வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் விடுதிகள் இரண்டின் புனரமைப்பிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வலயக் கல்விப் பணிமனையின் சிபாரிசிலேயே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி, கிராஞ்சி அ.த.க. பாடசாலையின் ஆசிரியர் விடுதியைப் புனரமைப்புச் செய்வதற்கான ஒழுங்குகளையும் வலயக் கல்விப் பணிமனை மேற்கொண்டு வருகின்றது. (ஒ-404-202)

# இடதுகரைப் பகுதியில் மீளக்குடியமரத் தயக்கம்

ஒட்டுசுட்டான்,ஏப்.15

முத்தையன்கட்டு இடதுகரைக் கிராமத்தில் நீர் வசதியில்லாதமையே அப்பகுதியில் மக்கள் மீளக் குடியமராததற்குக் காரணம்.

- இவ்வாறு முத்தையன்கட்டு இடதுகரை, மன்னாகண்டல் திட்டக் குழுவின் பிரதிநிதி பாலசிங்கம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முத்தையன்கட்டு இடதுகரைப் பகுதிக்குக் குளத்துநீர் வருவதில்லை. இதனால் அடிப்படை நீர் வசதி கிடைப்பதில்லை. எனவே, அப்பகுதியில் மீளக்குடியமரப் பலரும் தயங்குகின்றனர் - என்கின்றார். (ஒ-341-202)

# சுனாமி பாதித்த சிறுவர்களுக்கு உதவி

புதுக்குடியிருப்பு,ஏப்.15

சுனாமி அனர்த்தத்தால் தாய், தந்தையை இழந்த முல்லைத்தீவுப் பிரதேச சிறுவர்களுக்கு வெளிநாட்டில் வசிக்கும் முல்லைவாசிகள் உதவிகளை வழங்கியுள்ளனர்.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள் மேற்படி 73 சிறுவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வங்கியில் வைப்பிலிட்டு கணக்கு ஆரம்பித்து முல்லைத்தீவு கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாசத்தினூடாக வழங்கியுள்ளனர்.

அதேபோன்று, கடந்த 12 ஆம் திகதி நெதர்லாந்தில் வசிக்கும் இந்திரன், க.பாஸ்கரன் ஆகியோர் இணைந்து பாதிக்கப்பட்ட 63 சிறுவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வைப்பிலிட்டு சமாசத்தினூடாகப் புத்தகங்களைக் கையளித்துள்ளனர். (ஒ-353-202)

# தொழிலாளர் பற்றாக்குறையால் வீடமைப்புத் திட்டங்கள் தாமதம்

## கிளிநொச்சி அரச அதிபர் உதயனுக்குத் தகவல்



பரந்தன்,ஏப்.15

கட்டுமானப் பணிகுத் தொழிலாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் மீளக் குடியமர்ந்தவர்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள் தாமதமாகின்றன.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் உதயனிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந்துவரும் கிளிநொச்சி மாவட்ட மக்கள் தற்காலிகக் கொட்டில்களில் தொடர்ந்து வாழும் அவல நிலை குறித்துக் கேட்டபோதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் 1991ஆம் ஆண்டு 34 ஆயிரம் குடும்பங்கள் வசித்தன. யுத்த சூழ்நிலை காரணமாக சுமார் 27 ஆயிரம் குடும்பங்கள் முற்றுமுழுதாக இடம்பெயர்ந்தன. அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தற்போது மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

எமது மதிப்பீட்டின்படி மாவட்டத்தில் சுமார் 23 ஆயிரம் வீடுகள் பகுதியாகவோ, முற்றாகவோ அழிந்தநிலையில் உள்ளன. உலக வங்கி நிதியுதவியுடன் 16 ஆயிரம் வீடுகள் அமைக்கத் திட்டமிட்டிருந்தோம். அப்போது ஒரு வீட்டுக்கு 75 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. பின்னர் வீடொன்றுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவு செய்வதெனவும் அதுவும் மாற்றப்பட்டு தற்போது ஒரு வீட்டுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால், வீடுகளின் எண்ணிக்கை குறைந்து 3 ஆயிரத்து 500 முதல் 4 ஆயிரம் வீடுகளே ஒதுக்கப்பட்ட நிதியில் கட்டக் கூடியதாகவுள்ளது.

கடந்த ஆண்டு மாதிரி வீடமைப்புத் திட்டத்தின்கீழ் 100 வீடுகளை மக்கள் பங்களிப்புடன் உருவாக்கியுள்ளோம். இதனை உலக வங்கி கவனத்தில் எடுத்துள்ளது.

இதேவேளை, 500 வீடுகளை அமைப்பதற்கான நிதியை அரசு வழங்கியுள்ளது. அதனைக் கொண்டு வீடுகளைக் கட்ட 25 கிராமங்களைத் தெரிவுசெய்துள்ளோம். தற்போது பயனாளிகளைத் தெரிவுசெய்கின்றோம். அரசிடம் நிதிப்பற்றாக்குறை நிலவுவதால் அரச சார்பற்ற நிறுவனங்களும் வீடமைப்புத் திட்டங்களுக்கு உதவவேண்டிய அவசியம் உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அழிந்த வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் திட்டத்தை 5 வருடங்களில் செயற்படுத்தத் தீமானிக்கப்பட்டுள்ளது. ஆனால், கட்டுமானத்துறையில் போதுமான ஆளணியினர் இல்லை. கட்டுமானப் பொருள்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது. ஆகவே, கட்டுமானப் பணிக்கான பயிற்சிகளை இங்குள்ளவர்கள் பெறுவதில் ஆர்வம் காட்டவேண்டும்.

அரசு முதற்கட்டமாக வழங்கிய நிதியைக் கொண்டு 6 மாத காலத்தில் 500 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டால் அடுத்த கட்ட நிதியைப் பெறமுடியும். ஆகவே, துரிதமாக வீடமைப்புத் திட்டங்களைப் பூர்த்திசெய்வது மாவட்ட நிர்வாகம் மற்றும் மக்கள் கைகளிலேயே தங்கியுள்ளது - என்றார் அரச அதிபர். (ஒ-352)




# கனகாம்பிகை ஆலயத்தில் சிலப்பதிகாரப் பெருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.15

இரணைமடு கனகாம்பிகை அம்மன் கோயில் பெருந்திருவிழா இரண்டாம் நாளன்று முன்னிட்டு சிலப்பதிகாரப் பெருவிழா நடத்தப் படவுள்ளது. கிளிநொச்சித் தமிழ்ச் சங்கத்தின் வழிகாட்டலில் அறங்காவலர் குழுவின் ஆதரவுடன் இரணைமடு, வில்சன் வீதி மக்கள் இந்த விழாவை நடத்துகின்றனர்.

நாளை சனிக்கிழமை தமிழ்ச் சங்கத் தலைவர் வே.பரமநாதபிள்ளை தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் முற்பகல் 10.30 மணிக்கு 'கண்ணகியின் வாழ்வியல்' என்னும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி சி.திருநாவுக்கரசு கருத்துரை வழங்குவர்.

இரவு நிகழ்வு இரவு 8.30 மணிக்கு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும். நிகழ்வில் 'கண்ணகி காட்டிய வீரம்' என்னும் தலைப்பில் கலாநிதி சி.திருநாவுக்கரசு சிறப்புரையாற்றுவார். தொடர்ந்து யாழ்ப்பாணம் அமுதசுரபி கலைமன்றம் வழங்கும் 'பெண்களின் பெருமையை பெரிதும் பேசுவது சிலம்பா? இராமாயணமா?' என்னும் தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு பாடசாலை அதிபர் செ.இரவீந்திரனின் நெறியாளகையில் உருவான 'சிலம்புச்செல்வி கண்ணகி' என்னும் நாட்டுக்கூத்தும் மேடையேறும்.(ஒ-202)

# மோட்டார்த் திணைக்களத்தின் நடமாடும் சேவை கிளிநொச்சியில்

வட்டக்கச்சி,ஏப்.15

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் கிளிநொச்சி செயலகத்தில் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 29ஆம், 30 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ள இந்த நடமாடும் சேவை மூலம் மோட்டார் சைக்கிளுக்குரிய சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கல், புதிய மோட்டார் சைக்கிள்களைப் பதிவுசெய்தல், உரிமை மாற்ற விண்ணப்பங்கள் ஏற்றல் மற்றும் இவை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல் போன்ற செயற்பாடுகள் நடத்தப்படவுள்ளன.

சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கான விண்ணப்பப் படிவங்களைக் கிளிநொச்சி செயலக மோட்டார் போக்குவரத்துக் கிளையில் பெற்று எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கும்படியும் -

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற எழுத்துப பரீட்சையில் சித்தியடைந்தவர்களது மருத்துவச் சான்றிதழ்கள் 6 மாதங்களுக்கு மேற்பட்டிருப்பின் புதிய மருத்துவச் சான்றிதழைப் பெற்று எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் -

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் கேட்டுள்ளார்,

எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன் புதிய மருத்துவச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கத் தவறியவர்கள் செயல்முறைப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஒ-405-202-305)



சோழாநிலாக் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடத்தின் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் புதிய கட்டடத்தை நாடாவை வெட்டித் திறந்துவைக்கிறார். *(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)*

# ஜெயபுரம் பகுதியில் கள்ள நோட்டு

ஜெயபுரம்,ஏப்.15

ஜெயபுரம் பகுதியில் கள்ள நோட்டுகளின் புழக்கம் அதிகரித்துள்ளது.

அண்மையில் ஜெயபுரம் மக்கள் கடையில் பொருள் வாங்கிய ஒருவர் வழங்கிய பணம் ஆயிரம் ரூபா கள்ளநோட்டாக இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அப்பகுதி மக்களைக கள்ளநோட்டு தொடர்பாக அவதானமாக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(ஒ-291-202)

# பாரதிபுரத்தில் 'வேதா' குடியிருப்பு திறப்பு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அறிவியல் நகர் பாரதிபுரத்தில் நிரந்தரக் குடியிருப்பு ஒன்றின் திறப்புவிழா நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடனும், புலம்பெயர்ந்து அமெரிக்காவில் வாழும் ராஜரெட்ணம் குடும்பத்தினரது நிதிப் பங்களிப்புடனும் இக்குடியிருப்பு அமைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற இக்குடியிருப்பின் திறப்பு விழா கிளிநொச்சி வலய அரசியல்துறைப் பொறுப்பாளர் சிறி தலைமையில் நடைபெற்றது.

ஆரம்பத்தில் பொதுச்சுடரினைத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் ஏற்றிவைக்க, தேசியக்கொடியினைத் தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றிவைத்தார். இதனையடுத்து தியாகி அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கான ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன. தொடர்ந்து 'வேதா' குடியிருப்பின் பெயர்ப் பலகையினைத் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப்பணிப்பாளர் கே.பி.றெஜி திரைநீக்கம் செய்தார்.

இதனையடுத்து தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் நீகன் ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினர்.

இதனையடுத்து தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி மற்றும அரசியல்துறையின் பிரிவு சார்ந்த பொறுப்பாளர்கள் பயனாளிகளிடம் திறப்புக்களை வழங்கி வீடுகளைக் கையளித்தனர். போர்ச் சூழல் காரணமாகத் தங்களது வீடு வாசல்களை இழந்த நிலையிலும், தொழில் வாய்ப்புக்களின்றி சமூக, பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வந்த குடும்பங்களுள் 35 குடும்பங்களுக்கான வீடுகளைக் கொண்டதாக இக்குடியிருப்பு அமைக கப்பட்டுள்ளது. (ஒ)

# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
06 • 06 • 1949



மறைவு
08 • 05 • 2003

திருமதி

## ஸ்ரீபாலகிருஸ்ணன் சந்திரபாலதேவி

(அன்னாமலை) (சாந்தி)

திதி: சப்தமி (15.04.2005)

பொட்டிட்ட நெற்றியும் புன்சிரிப்பும்
புனிதநீறும் அன்பான பேச்சும்
தங்க மனசும் தளராத உறுதியும்
மங்காத அறிவும் எம் இதயத்தைக் கவர்ந்தன
எம்மிடம் ஆருயிர் தோழியாக
பண்பிலே தெய்வமாக
எம் மனதிலே இடம்பிடித்தாய்

அன்போடு பழகி பண்போடு வாழ்ந்தாயே சாந்தி!
உன்னோடு வாழ்ந்த நாங்கள் உள்ளத்தில் நிறைந்து
உன்னையே நினைக்க கண்ணீரும் வற்றிவிட்டதே!
எப்போதும் உன் முகம் கண்முன்னே தோன்றுதம்மா!

அன்புக்கோர் இலக்கணமாய் பண்புக்கு இருப்பிடமாய்
எம்மிடையே வாழ்ந்தாயே எங்கள் சாந்தி!
இன்ப வாழ்வு வாழ்வாய் என்று எண்ணியிருந்த வேளையிலே
எங்களையெல்லாம் தவிக்கவிட்டு எங்குதான் சென்றாயோ?
துன்ப சாகரத்தில் எம்மை மூழ்க வைத்த விந்தையென்ன?
தூயவளே ஆயிருரே துடிதுடிக்க வைத்தாயே?
என்று இனி உன்னைக் காண்போம்
ஒருமுறை வந்து திருமுகத்தைக் காட்ட ஓடி நீ வாராயோ சாந்தி?

நீங்கள் இருந்தளித்த நிறைவான வாழ்க்கையின்
நிம்மதிக் கோலங்கள் நெஞ்சைப் பிழிகின்றன
நிழலின் அருமை வெய்யிலில் தெரிகிறது
நிலவின் பெருமை இருளில் புரிகிறது
வருவதும் போவதுமான வாழ்க்கைச் சக்கரத்தில் வந்தவர்
தங்கிட வழியேதுமில்லை

எமக்கேன் இப்படியொரு சோகம் என்று ஏங்காத நாளில்லை;
எண்ணாத பொழுதில்லை;
எப்போது எவர் வந்தாலும் இல்லையெனாத உங்கள்
இன்முகமும் நற்குணமும் எமை வாட்டுகின்றன!
உடலால் நீங்கள் இல்லாத போதும் உணர்வில்
கலந்து உயிருள் உறைகிறதே!

நீங்கள் எம்மைப் பிரிந்து சென்றுவிட்ட காலந்தான்
இரண்டாண்டு நிறைந்த கதையானது
நாங்கள் காலத்தை இருளாக்கிக் கண்ணீரை ஆறாக்கி
வாழ்வைப் போராக்கி வாழாமல் வாழுகிறோம்.
எமையெல்லாம் ஏங்கித் தவிக்கவிட்டு மின்னல் என மறைந்தாயோ சாந்தி!
ஆண்டுகள் இரண்டு போனாலும் எம்மைவிட்டு
அகலாது உம் நினைவு! அன்று உனது பயணம் இறுதிப்பயணமென நாமறியோம்!
காலம் அறியாத காலன் உன் உயிரை நடு வழியில் கவர்ந்தானே?
*அம்பாளின் சந்நிதியில் அம்மா உன் ஆத்மாவே என்றும்*
*அழியாத இன்பமுடன் வீற்றிருக்கும்*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

'பவளவாசம்',
573, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

கணவர் - ப.ஸ்ரீபாலகிருஸ்ணன்
[அண்ணாமலை].

(44230)(26-14)

உதயன் ஊடக அனுசரணையுடன் நடக்கும்

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம் அரையிறுதி, இறுதி ஆட்டங்கள் மே 5 ஆரம்பம்

## மின்னொளியில் நடத்துவதற்கு ஏற்பாடு

வலி.வடக்கு,ஏப்.15

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமி யால பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச் சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் 'உதயன்' ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் உதை பந்தாட்ட லீக் நடத்தும் மாபெரும் உதைபந் தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட் டங்கள் அடுத்தமாதம் 5ஆம் திகதி முதல் மின்னொளியில் நடைபெறவுள்ளன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் கடந்த மாதம் 16ஆம் திகதி முதல் நடந்த சுற்றுப்போட்டியில் 57 அணிகள் பங்குபற்றின.

தினமும் இரு ஆட்டங்கள் என்ற வீதம் இடம்பெற்று வந்த சுற்றுப்போட்டியில் அரையிறுதி ஆட்டங்களுக்கு நான்கு அணிகள் தெரிவுசெய் யப்பட்டுள்ளன.

'அ' பிரிவில் தெரிவுசெய்யப்பட்டுள்ள வன்னி வட்டக்கச்சி லக்கிஸ்டார் விளையாட்டுக் கழக மும் 'ஆ' பிரிவில் தெரிவுசெய்யப்பட்டுள்ள யாழ்.பல்லைக்கழக விளையாட்டுக் கழகமும் முதலாவது அரையிறுதி ஆட்டத்திலும் -

'இ' பிரிவில் தெரிவாகியுள்ள சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும் 'ஈ' பிரிவில் தெரிவாகி யுள்ள மனோகரா விளையாட்டுக் கழகமும் மற் றோர் அரையிறுதி ஆட்டத்திலும் - மோத விருக்கின்றன.

இரு ஆட்டங்களிலும் வெற்றிபெறும் அணி இறுதியாட்டத்தில் மோதும்.

அரையிறுதியாட்டங்களையும் இறுதியாட் டத்தையும் மின்னொளியில் நடத்துவதற்காக சுற்றுப்போட்டி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மின்னொளியில் இந்த ஆட்டங்கள் நடை பெறும்போது 40 வயதுக்கு மேற்பட்ட பிரிவினர் களுக்கான ஆட்டங்களை நடத்துவதற்கு தமி ழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவு ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

இந்த ஆட்டங்களில் முல்லைத்தீவு, கிளி நொச்சி மாவட்ட அணிகளுடன் யாழ்.மாவட்ட லீக்குகளைச் சேர்ந்த அணிகளும் பங்குபற்று கின்றன. (3-86)

# நாளைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.15

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட் பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையி லான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ் பொது விளையாட்டு மைதானத் தில் நடைபெறவுள்ளது.

இந்த இறுதியாட்டத்தில் பொற்பதி விளை யாட்டு கழக அணியை எதிர்த்து கலாமன்றம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.(3-190)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.15

கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்கு உட படப் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடை யிலான மெய்வன்மைப்போட்டி நாளையும் நாளை மறுதினமும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (3-190)

## தமிழீழ விளையாட்டுத்துறை ஏற்பாட்டில் தென்மராட்சியில் பல்வேறு போட்டிகள்

### 20ஆம் திகதி முதல் 25 வரை

யாழ்ப்பாணம்,ஏப்.15

தென்மராட்சியில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் பல்வேறு போட்டிகள் தமிழீழ விளையாட்டுத்துறையின யாழ். மாவட் டப் பிரிவினால் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் நடத்தப்படவிருக்கின்றன.

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலைய மைதா னத்தில் இப்போட்டிகள் இடம்பெறும்.

உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், வலை பந்தாட்டம், கிரிக்கெட், தாச்சி ஆகிய விளை யாட்டுக்கள் நடத்தப்படவிருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்போட்டிகள் எதிர்வரும் 25ஆம் திகதிவரை நடத்தப்படும். வெற்றிபெறும் அணிகளுக்கு வெற் றிக்கிண்ணங்களும் வழங்கப்படவிருக்கின்றது. (3)

யாழ்.கழகங்களுக்கான கூடைப்பந்தாட்டம்

## பல்கலைக்கழக, கொக்குவில் அணிகள் மாவட்டச் சம்பியன்களாகின

யாழ்ப்பாணம்,ஏப்.15

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பிரிவு நடத்திய கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ். பல் கலைக்கழக அணியும் பெண்கள் பிரிவில் கொக்குவில் கே.ஸி.ஸி. அணியும் மாவட்டச் சம்பியனாகின.

யாழ்.மாவட்டத்தில் உள்ள கழகங்களுக்கு இடையில் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந் தாட்ட ஆடுகளத்தில் மின்னொளியில் இச்சுற்றுப் போட்டி இடம்பெற்றது.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

முதலில் நடந்த பெண்களுக்கான ஆட்டத் தில் கொக்குவில் கே.ஸி.ஸி. வி.கவும் உடு வில் மத்திய வி.கவும் மோதின.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி உடுவில் மத்திய விளையாட்டுக் கழக அணியை 32:23 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு நடுவர்களாக எஸ்.பிரசன்னா, கே.செந்தில்குமரன் ஆகியோர் கடமையாற்றி னர்.

இதைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆண் களுக்கான போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளை யாட்டுக் கழக அணி மோதியது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அணி சென்றலைட்ஸ் விளையாட்டு அணியை 55:44 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு நடுவர்களாக எஸ்.சுரேஸ் குமார் செ.ரமணன் ஆகியோர் கடமையாற்றினர்.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக அரச அதிபர் கே.கணேஸ் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ்.இராசதுரை மற்றும் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வி.மாது ளன், வலிகாம விளையாட்டுத்துறைப் பொறுப் பாளர் பார்த்தீபன் ஆகியோர் கலந்துகொண்ட னர். (3-190)

## ஓர் இன்னிங்ஸாலும் 38 ஓட்டங்களாலும் இலங்கையை நியூஸிலாந்து வென்றது



ஜேம்ஸ் பிராங்லின்

நேப்பியர்,ஏப்.15

இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் நேப்பியரில் நடைபெற்று வந்த இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் அபார வெற்றியை நியூஸிலாந்து பெற்றது.

ஓர் இன்னிங்ஸாலும் 38 ஓட்டங்களாலும் வெற்றிபெற்று இலங்கையை மண்கவ்வ வைத் தது நியூஸிலாந்து அணி.

இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட் டங்களைப் பெற்றிருந்தது. பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 9 விக்கெட் டுக்களை இழந்த நிலையில் 522 ஓட்டங் களுக்கு ஆட்டத்தை நிறுதிக்கொண்டது. அதன் பின் களமிறங்கிய இலங்கை அணி ஒரு விக் கெட் இழப்புக்கு 10 ஓட்டங்கள் எடுத்த நிலை யில் நேற்றுமுன்தினம் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

நேற்று ஆட்டம் ஆரம்பமானபோது இலங்கை அணி மளமளவென விக்கெட்டுக்களை இழந்து 273 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

நியூஸிலாந்து அணி வீரர் ஜேம்ஸ் பிராங் லின் அபாராமாகப் பந்துவீசி நான்கு விக்கெட் டுக்களைக் கைப்பற்றினார்.

இலங்கை வீரர் திலகரத்தின டில்சான் அபாரமாக ஆடி 73 ஓட்டங்களைப் பெற்றார்.(3)

## யாழ். சென்றல் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஏப்.15

யாழ்.இந்துக் கல்லூரியின் வியோக் கழகம் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் மின்னொளியில் நடத்திய கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணி சம்பி யனானது.

யாழ். இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற இறுதிப்போட்டியில் யாழ். மத்திய கல் லூரி 'ஏ' அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி 'பி' அணி மோதியது.

யாழ். மத்திய கல்லூரி அணி 53:36 என்ற புளளி அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது.

இப்போட்டிக்கு நடுவர்களாக எவ்.ரி. அல் பிரட், ஜே.விஜயன், எஸ்.செல்வச்சந்திரன் ஆகி யோர் கடமையாற்றினர். (3-190)

## 2007 உலகக் கிண்ணத்துக்குப் பின் கிரிக்கெட்டிலிருந்து கில்கிறிஸ்ட் ஓய்வு



ஆஸ்திரேலிய விக்கெட் காப்பாளர் - துடுப்பாட்ட வீரரான அடம் கில்கிறிஸ்ட், 2007 உலகக் கிண் ணக் கிரிக்கெட் தொட ருடன் ஓய்வுபெறுகி றார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் விக்கெட்காப்பாளர் கில்கிறிஸ்ட் (வயது 33) எந்தச் சூழ்நிலையிலும் ஆட்டத்தை மாற் றககூடியவர். தனது குடும்பத்துடன் அதிக நேரம் செலவிட விரும்புகிறார் இவர். ஆகையால் அடுத்த உலகக் கிண்ணத் தொடருடன் கிரிக் கெட்டில் இருந்து விடைபெற முடிவுசெய்து விட்டார்.

"எனது மனைவி, குழந்தைகள் இருவருட னும் அதிகநேரம் என்னால் செலவிட முடிவ தில்லை. இது என்னைப் பாதிக்கின்றது.

"எவ்வளவு நாள் இப்படியே இருக்கமுடி யும்? குடும்பத்துக்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டும் என்பதால் 2007 உலகக் கிண்ணத் தொடருடன் ஓய்வுபெற முடிவுசெய்துவிட்டேன். ஓய்வு அறிவிப்புக்கு 2007 உலகக் கிண்ணத் தொடரை தேர்தெடுக்க ஒரு காரணமுண்டு.

"மூன்றாவது முறையாக உலகச் சம்பி யன் பட்டம் கைப்பற்றுவதற்காக 2007 இல் எங்கள் அணி களமிறங்குகிறது. தொடர்ச்சியாக மூன்றாவது முறை கிண்ணத்தைக் கைப்பற் றும் ஆஸ்திரேலிய அணியில் நானும் இருக்க வேண்டும்" என்கிறார் அடம் கில்கிறிஸ்ட் (க-3)

## இன்றைய போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.15

யாழ்.கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசா லைகளுக்கு இடையில் கரபந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

எதிர்வரும் ஞாயிறு வரை போட்டிகள் இடம் பெறும். (3-190)

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: ஒருபார்வை

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற போட் டிகள் இரண்டும் ரசிகர்களின் பலத்த விமர் சனங்களுக்கு மத்தியில் இடம்பெற்றன. இரு போட்டிகளிலும் கலந்துகொண்ட அணிகள் கோல்கள் பெறும் சந்தர்ப்பங்களைத் தவற விட்டமையே இத்தகைய விமர்சனங்களுக்கு காரணமாக அமைந்திருந்தது.

முதல் ஆட்டத்தில் யாழ்.லீக்கைச் சேர்ந்த சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகமும் பருத் தித்துறை லீக்கைச் சேர்ந்த பொம்மேர்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

ஆட்டம் ஆரம்பமாகி முடிவடையும் நேரம் வரை இரு அணிகளும் விறுவிறுப்பாக விளை யாடிய போதிலும் கோல்கள் பெறும் பந்து களைப் போட்டி போட்டு இரு அணிகளும் வெளி யால் அடித்து ரசிகர்களின் விமர்சனங்களுக்கு உள்ளாகின.

இரு அணிகளும் பந்துகளைப்பெற்று எதிர ணியினர்களின் கோல் பகுதியை பந்துடன் ஆக் கிரமிப்பதும் பின்னர் பந்தை வெளியால் அடிப் பதும் என்ற நிலையில் முதல்பாதி ஆட்டம் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் முடி வடைந்தது.

ஆட்டம் ஆரம்பமாகி சில நிமிட நேரத்தில் சென்.மேரிஸ் கழக வலது உள்ளணி வீரர் வின்சிஸ் தனக்குப் பின்புறம் இருந்து உதைத்து கொடுக்கப்பட்ட பந்தைப் பெற்று முன்நகர்த் திச்சென்று முன்னணிவீரர் பிரபுவிடம் கொடுத் தார்.

ஆட்ட நிலையை நன்கு உணர்ந்த முன் னணி வீரர் பிரபு அதனை கவனமாக கோல் கம்பத்தினுள் அடித்து தனது அணிக்கான முத லாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

தொடர்ந்து அணிகளும் முன்னைய ஆட் டத்திலும் பார்க்க வேகமாக விளையாடியபோதி

உதயன்
ஊடக அனுசரணை

லும் பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழகம் விளை யாட்டைத் தனதுபக்கம் எடுத்துக் கொண்டது டன் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தைப் பெரும் நெருக்கடிகளுக்குள்ளாக்கியது.

ஆனாலும், இலகுவாக கோல்கள் பெறும் சந்தர்ப்பங்களைப் பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் தவறவிட்டமையால் ஆட்டம் 1:0 என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது.

இரண்டாவது ஆட்டத்தில் பருத்தித்துறை லக்கைச் சேர்ந்த அணிகளான மணற்காடு அன் ரனீஸ் விளையாட்டுக் கழகமும் அல்வாய் மனோ கரா விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண் டன.

மனோகரா விளையாட்டுக் கழகம் தனது அணிக்காக முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டது.

முன்னணி வீரர் உதயன், தனக்குக் கிடைத்த பந்தை முன்நகர்த்தி மத்தி முன் னணி வீரர் பாலதரனிடம் கொடுக்க அதனைப் பெற்று எதிரணியின் பின்னணி வீரர்கள் இரு வரை வெட்டி அடித்து தனது அணிக்கான முத லாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

அன்ரனீஸ் விளையாட்டுக் கழக வீரர்கள் சற்றுத் தடுமாறினாலும் கூட சில நிமிடங்க ளில் தம்மை சுதாகரித்துக் கொண்டு விளை யாடினார்கள். இந்நிலைமையில் 1:0 என்ற கோல் கணக்கில் முதல்பாதி ஆட்டம் முடி வடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளும் புதிய உத்வேகத்துடன் விளையாடியது. ஆனால், மனோகரா விளையாட்டுக் கழக முன் னணி வீரர் கருணானந்தன் தனக்கு வலது முன்னணி வீரர் கிரிதரன் கொடுத்த பந்தைப் பெற்றுக்கோல் கம்பத்தினுள் அடித்துத் தனது அணிக்காக இரண்டாவது கோலைப் பெற்றுத் தனது அணியின் வெற்றியை முன்னிலைப் படுத்திக்கொடுத்தார்.

இந்நிலைமை தொடர்ந்து பேணப்படுமா என்று ரசிகர்களின் கேள்விகளுக்கு மத்தியில் ஆட்டம் தொடர்ந்து இடம்பெற்றன. மிகவும் பல மான எதிர்ப்பைக்காட்டி அன்ரனீஸ் விளையாட் டுக் கழக வீரர்கள் விளையாடினார்கள்.

இதேநேரம், இரு அணிவீரர்களுக்கு இடை யிலும் சற்று முறுகலான நிலைமை தோன்றிய போதிலும், மத்தியஸ்தரின் நடவடிக்கையினால் தடுக்கப்பட்டது.

ஆட்டம் முடிவடைய சில நிமிடம் இருக் கும் நிலைமையில் தனது அணிக்கான முத லாவது கோலை வலது முன்னணி வீரர் கமல தாஸ் முன்னணி வீரர் தர்மதாசிடம் இருந்து பெற்ற பந்தைத் தனது அணியின் நிலை மையை உணர்ந்து கவனமாகக் கோல் கம்பத் தினுள் அடித்துப் பெற்றுக்கொடுத்தார்.

இந்நிலைமை மனோகரா அணியினருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதுடன் ஆட் டத்தின் போக்கையும் மாற்றிக் கொண்டது. ஆட்டம் முடிவடைய சுமார் ஐந்து நிமிடங்கள் இருந்த நிலையில் மீண்டும் ஒரு கோலைப் பெறவேண்டும் என்ற முயற்சியுடன் அன்ரனீஸ் விளையாட்டுக் கழக வீரர்கள் வேகமாகவும் விறுவிறுப்பாகவும் விளையாடி எதிரணியினரின் முயற்சிகளை முறியடித்து பந்துகளை வேக மாக நகர்த்திக்கொண்டே இருந்தார்கள்.

இதேநேரம், மனோகரா விளையாட்டுக்கழக வீரர்கள் தடுத்து விளையாடியதுடன் தமது கோல் கம்பம் நோக்கி இந்தப் பந்துகளை தடுத்து நிறுத்தியதுடன் முன்நோக்கி தூக்கி யடித்தும் கோல்கள் பெறும் சந்தர்ப்பத்தை எதிர ணியினருக்கு வழங்காது முறியடித்தனர்.

ஆட்டம் 2:1 என்ற கோல் கணக்கில் முடி வடைந்தது. (3-86)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கொம்பிறசர் (100 லீற்றர் Tank), Welding Machine (Air cool) விற்பனைக்குண்டு. தொடர்பு: R.V.மோகன், 196/1, நாவலர் வீதி (ரயில்வே கடவைக்கு அருகில்), யாழ்ப்பாணம். (44202)

## கொட்டகை விற்பனைக்கு

35X25 அடி நீள, அகலங்கொண்ட கற்தூணகள், பனைமரங்கள் கொண்டு அமைக்கப்பட்ட கொட்டகை விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776063173. (44210)

## தவறிவிட்டது

13-04-2005 புதன்கிழமை முனீஸ்வரன் வீதியில் ஒரு தொகைப்பணமும் நகைகளும் அடங்கிய கைப்பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் விஜய் சில்க், 123, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். T.P.: 222 6162. (44217)

தர்மலிங்கம் விமலநாதன் உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் என்ற முகவரியைச் சேர்ந்த எனது அடையாள அட்டை இல.800181844V அண்மையில் முகமாலைக்கும் யாழ்ப்பாணத் திற்குமிடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ்.பொதுசன நூலகத்தில் ஒப்படைக்கவும். (44167)

## காணி விற்பனைக்கு

காங்கேசன்துறை வீதி, தாவடி, கொக்குவிலில் கிணற்றுடனும் சுற்றுமதிலுடனும் கூடிய 11 பரப்புக்காணி (இரண்டு பக்கமும் வீதிகளைக் கொண்டது), கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அருகில் (காளிகோயிலடி), 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0779059840.(44211)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

பூச்சி நீக்கப்பட்டதும் தடுப்பூசி போடப்பட்டதும் 2 மாதங்கள் நிறைந்ததுமான Pure Doberman Pinchar நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. n j /1, பழம்றோட், கந்தர்மடம். (44181)

## மணமகன் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்ப, 1967இல் பிறந்த, 15 வருடங்கள் ஆசிரியையாகச் சேவையாற்றும் பெண்ணுக்கு 40-42 வயதிற்குட்பட்ட மணமகன் தேவை. (அரச தொழில் அல்லது வியாபாரம் என்றாலும் விரும்பப்படும்) சீதனம் வழங்கபபடும். தொடர்புகளுக்கு: T.P.: 077 6110071. (44179)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யாதிருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், சீதனம் கொடுக்க வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம் விரும்பி ஏற்கும் ஆண்கள். எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமண மாலை, இல.289A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா. T.P.: 024 4588410, 0776 630207 (43302)

## வீடு விற்பனைக்கு

M.S. லேன், கோண்டாவில் கிழக்கு (குமரகோட்ட வைரவர் கோயில் அருகில்), கோண்டாவிலில் சகல வசதியும் கொண்ட வீடு நான்கு பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு.

பார்வையிடும் நேரம்:
*காலை 8.30 - பிற்பகல் 2.30 மணி வரை.*

**தொடர்பு: 077 6118860.**
(44093)

# இதய அஞ்சலி

எங்கள் தேவஸ்தானத்தின் நிதித்துறையினை கணக்காய்வு செய்து தொண்டாற்றியவரான மதிப்புக்குரிய

## கார்த்திகேசு சிவசுப்பிரமணியம்

[முகாமையாளர், செல்வேந்திரா அன்கோ, பட்டயக் கணக்காளர் நிறுவனம்]
அவர்களின் பிரிவு குறித்து எமது இதய அஞ்சலிகளைச் சமர்ப்பித்து அன்னாரது ஆன்மா சாந்திபெற துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி **தங்கம்மா அப்பாக்குட்டி** J.P.
**தலைவர்,**
*ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,*
(சி-42296)(32-14-45-26) *தெல்லிப்பழை.*

# தனியார் பாதுகாப்புச்சேவை, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

01-07-2005 தொடக்கம் 30-06-2006 வரையான காலப்பகுதிக்குத் தனியார் பாதுகாப்புச் சேவை வழங்குவதற்குப் பின்வரும் தகுதியுடையோரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத ரூபா 250/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 28-04-2005 காலை 10.00 மணி வரைக்கும். கேள்விகள் உடனே திறக்கப்படும். அத்திகதிக்குப் பின்னர் வரும் கேள்விப் பத்திரங்களும், தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்காத கேள்விப் பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.

*01) அண்மையில் பாதுகாப்பு அமைச்சில் பெறப்பட்ட பாதுகாப்புச் சேவை அனுமதிப் பத்திரம்.*
*02) சேவை முன்னனுபவம்.*
*03) நிதி நிலைமைத் தகைமை*
*(6 மாத கால வங்கிப்பற்றும், வருமான வரிப்பற்றுச் சீட்டும்)*

மேலதிக விவரங்களை வைத்தியசாலைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
(32-14-45-26)

பதில் பணிப்பாளர்,
வைத்திய கலாநிதி எஸ். **ரவிராஜ்,**
(சி-42296) **போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## கேள்விப்பத்திர அறிவித்தல்

பின்வரும் பொருள்களை வழங்குவதற்குத் தகுதியுடைய வர்த்தகர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. பிணைச்சல், பூட்டு, திறாங்கு, யன்னல் கொழுக்கி போன்றவை.
2. நீர்க்குழாய்கள், நீர்க்குழாய் இணைப்புக்கள், வால்புகள் மற்றும் ஏனைய நீர்க்குழாய்ப் பொருள்கள்.
3. ஒட்டுப்பலகைகள், கதவுகள்
4. செரமிக் உபகரணங்கள்
5. தீந்தைகள், வாணிஸ் பிறஸ்கள்.
6. மின்சாரப் பொருள்கள்.

கேள்விப் பத்திரப்படிவங்களை மீளளிக்கத்தகாத வைப்புப்பணமாக ரூபா 500.00ஐ காசாக யாழ்.பல்கலைக்கழக நிதிக்கிளையில் அல்லது யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளை கணக்கு இல.1-62-090501-3இல் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 18-04-2005 தொடக்கம் 25-04-2005 வரை பல்கலைக்கழக நிதிப்பிரிவில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை 29-04-2005ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்னதாக *நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**கட்டடப்பொருள்கள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்**" என்று குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 29-04-2005 அன்று பி.ப.2.30 மணிக்கு திறக்கப்படும்.

பதிவாளர்,
**யாழ்.பல்கலைக்கழகம்.** (சி-42281)(26-14-45)

# உயர் கல்விக்கு உறுதுணையாக...

32 வருடங்கள் சேவையாற்றிய தனித்துவமான நிறுவனத்தில்

## O/L Day Class

பகல் நேர வகுப்புகள்
காலை 8.30 - பி.ப.1.15

அனுமதிகள் 30ம் திகதி வரை மட்டுமே வழங்கப்படும்

மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

*The Express Institute*
Irupalai, Kopay. -அதிபர்.

# மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்
## மேசன்மார் தேவை

எமது சங்கத்தின் கட்டட வேலைகளை நாளாந்த அடிப்படையில் செய்வதற்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர். விரும்புவோர் 20.04.2005 இற்கு முன்னர் சங்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தலைவர்,
மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்,
மானிப்பாய்.

# முக்கிய அறிவித்தல்

**15.04.2005இல் துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன்தேவஸ்தான இராஜகோபுர திருப்பணி நிதிக்கான மாபெரும் அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. இந்தச் சீட்டிழுப்பு எதிர்வரும் 07.11.2005 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறிவித்துக் கொள்ளுகிறோம். இதுவரை அதிர்ஷ்டலாபச்சீட்டை வாங்கியவர்கள் ரிக்கற்றைக் கவனமாக வைத்திருக்குமாறு வேண்டுகிறோம்.**

(44215)(32-14-45-26) - **திருப்பணிச்சபையினர்.**

# நெஞ்சை விட்டகலாத
## மூன்றாம் ஆண்டு இதய அஞ்சலி



திருமதி
**ஈவ்லின் இராஜமலர் அம்பலவாணர்**

மனம் மகிழ மலர்வு 1927-06-05
மனம் நெகிழ உதிர்வு 2002-04-15

*"ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது."*
- (சங்கீதம் 116:15.)

தியான இல்லம்,
"கிறீன் வில்லா",
மானிப்பாய். (44170)(46-14-45-26)

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், மகன் நிமால்,
மருமகள், பேரன்.

# இருபதாவது அகவையைப் பூர்த்தி செய்து தொடர்ந்தும் வீறுநடையுடன்.....
## கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

### மகளிருக்கான துரித 3 மாத காலப் பயிற்சிகள்

- **கேக் ஐசிங்** - சகல விதமான ஐஸிங் 22 வகையான கேக் அமைப்புகள், மாச்சீனி மலர்கள் (Suger Crafting) என்பன வெகு சிக்கனமான முறையில் செய்தல்.
- **கூந்தல் அலங்காரம்** - 20 இற்கும் மேற்பட்ட கொண்டைகள் (Hair Styles) போடுதல்.
- **FABRIC PAINTING** - கைக்குட்டை, தலையணை உறைகளில் வர்ணந்தீட்டல், EMBOSS PAINTING, Pot PAINTING, மண் PAINTING.
- **உணவுகள் தயாரித்தல்** - மேலைத்தேய, கீழைத்தேய மற்றும் சீன உணவுகள், சிற்றுண்டிகள் தயாரித்தல்.
- **கைவேலை** - கடதாசி அலங்காரம், கழிவுத்துணிவேலை, கிறிஸ்ரல் வேலை, முத்துமாலை கோர்த்தல், றிபன்வேலை.

**பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்**

இத்துடன், அடிப்படை FACIAL அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரமும் வித்தியாசமான முறைகளில் சேலை அணியும் விதமும் 2நாள் வகுப்புகளாக நடைபெறும்.

6 மாதகால தையல் பயிற்சி பூவேலை வகுப்புகள்

**தையல் பயிற்சி** - குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள் தைத்தல்
**பூவேலை** - கடதாசியினாலும், துணிகளினாலும் 20 வகையான மலர்கள் மற்றும் BOUQUET செய்தல்.

**சனி, ஞாயிறு புதிய வகுப்புகள்ஆரம்பம்: 24.04.2005**
**கிழமை நாள் புதிய வகுப்புகள் ஆரம்பம்: 25.04.2005**

மேலும் விவரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப.2.00 மணிவரை அறிந்துகொள்ளலாம்.

(சி.42268)(42-14-45-26) - **இயக்குநர்.**

# இசை வகுப்பு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.15

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலவச இசைக்கலை வகுப்புகள் நடைபெறவுள்ளன.

சங்கீதம், நடனம், மிருதங்கம், பண்ணிசை ஆகிய வகுப்புகளே நடைபெறவுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இவ்வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

தரம் 6இற்கு மேற்பட்ட வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்கள் இந்த வகுப்பில் இணைந்து கற்கலாம் என இசைக்கல்லூரி அதிபர் சு.வரதராஜசர்மா தெரிவித்தார்.

(3-204)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1966-06-11



மறைவு 2004-04-26

## கந்தையா சண்முகலிங்கம்

திதி: ஸப்தமி

அன்பின் திருவுருவாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய் - இருந்து
எமை இவ்வுலகில் வாழவைத்த - எம்
குடும்பத்தின் ஒளிவிளக்கே
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எம்துயரம் - உம்
ஆத்மா வாய்க்கால்தரவை விநாயகன்
பாதங்களைச் சென்றடைய வேண்டுகின்றோம்
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

மாசிவன் சந்தி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (41206)(26-14-45) - குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

### வேலுப்பிள்ளை தம்பிஐயா

(மஞ்சுளா ரேடர்ஸ், வவுனியா)

மண்ணில் 12.06.1923 — விண்ணில் 16.03.2005

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை இன்று (15.04.2005) வெள்ளிக்கிழமை வேலணை சாட்டி தீர்த்தக்கரையிலும் 17.04.2005 ஞாயிற்றுக்கிழமை வீட்டுக் கிருத்தியம் அன்னாரின் இல்லத்திலும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

No.90, K.K.S. வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
T.P. : 021 222 7495 (44233)(29-17-34)

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா சுப்பிரமணியம் (முருகா)

(முன்னாள் கிளைமுகாமையாளர், சாவகச்சேரி M.P.C.S.)

மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செ.சுப்பிரமணியம் 13.04.2005 காலமானார்.

அன்னார் சாந்தம்மாவின் (இளைப்பாறிய ஆசிரியை, யா/சாவ.மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும் விஜயகுலராணி (உப அதிபர், யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.), நந்தினி, விஜயதரன் (கனடா), கலாதரன் (டென்மார்க்), குமுதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரன் (ஆசிரியர், யா/கைதடி நாவற்குளி அ.த.க.பா.),கனகநாதன் (ஸ்ரீமுருகன் பல்பொருள் உரிமையாளர் - மட்டுவில்), இன்பரதி (கனடா), சூரியமூர்த்தி (இராமநாதபுரம் அ.த.க.பா.), சிவசாந்தி (டென்மார்க்) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2005) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் கிழக்கு.
(44238)(29-17-34)

தகவல்: கா.பரமேஸ்வரன்,
(சங்கீத ஆசிரியர் - மருமகன்).

### வேலுப்பிள்ளை சரவணப்பெருமாள் (பாப்பா)

(மின்சாரப்பகுதி, சீனோர் காரைநகர் குருநகர்)



காரைநகர், பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சரவணப்பெருமாள் நேற்று (14.04.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை தம்பதியின் கனிஷ்ட புதல்வனும் வே.செல்லம்மாவின் பெறாமகனும் காலஞ்சென்ற பொன்னையா மற்றும் அன்னம்மா தம்பதியின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் பரணீதரனின் (மாணவன், தரம் 11 -யாழ்.இந்து) அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2005) வெள்ளிக்கிழமை பிப. 1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

17/2, ஐயனார் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்: ச.சரஸ்வதி
(மனைவி). (44236)(29-17-34)


**மனோகரா** யாழ்ப்பாணம்

விஜய், ஹரிணி, வடிவேல் நடித்த

**சச்சின்**



காட்சி நேரம்:
10.30 a.m., 2.30.p.m.,6.30p.m.,9.30 p.m.

(C/42294)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
கமலஹாசன், மனீஷா கொய்ராலா, நாசர் நடித்த

**மும்பை X பிரஸ்** (ரீகல்ஸ்)

காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(C/41381)(29-16-17)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சரத்குமார், நமிதா, வடிவேல் நடித்த

**ஏய்** (சினிமா)

கா.நேரம்:
11.00, 2.45,
6.00 (பு.நே)

**லக்ஷ்மி** இணுவில்

ஸ்ரீகாந், மீராஜஸ்மின், விவேக் நடித்த

**ஜி** (ரீகல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, (பு.நே.)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த



**சந்திரமுகி** (ரீகல்ஸ்)

காட்சிகள்:
11.00, 3.00,
7.00 (பு.நே.)
விசேட காட்சிகள்:
10.00, 1.00
(பு.நே.)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

இரண்டாவது வெற்றிவாரம்.
தாவழமைந்தன் ஜெய் ஆகாஷ், பிரணதி, நாசர், தாமு, வையாபுரி நடித்த

**திருதேவா**



கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)


# மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை இராசநாயகம்

(இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்)

காரைநகர், வலந்தலை, S.M. கேணியடியைப் பிறப்பிடமாகவும் 40/2, லியநகே வீதி, மல்வத்த வீதி, தெஹிவளையை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசநாயகம் நேற்று (14.04.2005) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதிகளின் மூத்த புதல்வரும் காரைநகர், பலுகாட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆலிலை கந்தையா - வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மருமகனும் சவுந்தரத்தின் அன்புக் கணவரும் முருகதாஸ் (லண்டன்), சத்தியதேவி (தெஹிவளை), நடராசா (லண்டன்), சுந்தரதாசன் (லண்டன்), சுபத்திரா (நீர்கொழும்பு), சிவதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பார்வதி, சுப்பிரமணியம், கந்தையா (கனடா), காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் பாலசுந்தரம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக பொறளை ஜயரத்ன மலர்ச் சாலையில் இன்று தொடக்கம் வைக்கப்பட்டு 17.04.2005 ஞாயிறு காலை 9 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 11 மணியளவில் கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*40/2, லியநகே வீதி,*
*மல்வத்த வீதி, தெஹிவளை.*
*T.P. No: 2715548* (சி-42318)(29-34-17)

தகவல்:
மனைவி சவுந்தரம்,
பிள்ளைகள்.

### தில்லையம்பலம் தாமோதரம்பிள்ளை

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் தாமோதரம்பிள்ளை 13.04.2005 புதன்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் - முத்தாச்சி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகம்மாவின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மருதம்மா, பொன்னுத்துரை, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேசபாலன், தங்கராசா, தவராசா (ஜேர்மனி) தேவராசா (ஜேர்மனி), ஜெயராணி (கனடா), மதிராணி, காலஞ்சென்ற தனராசா, தீபராசா, மகிந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திராணி, இராஜேஸ்வி, நந்தினி (ஜேர்மனி), உதயகுமார், வசந்தரூபன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2005) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11 மணியளவில் கண்ணாப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*கல்வயல், சாவகச்சேரி.*
*T.P. No: 0776577424* (44243)(29-34-17)

தகவல்:
குடும்பத்தினர்.

### ஏகாம்பரம் ஆறுமுகம்

புங்குடுதீவு, 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் ஆறுமுகம் 10.04.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (44245)

*69,B.A.தம்பிலேன்,*
*வண்ணார்பண்ணை,யாழ்.*

தகவல்: நா.சுந்தரராஜா,
(மருமகன்- கிராமஉத்தியோகத்தர்)


**eTouch COMPUTER SYSTEM**
"The right way to touch IT"

**வழங்கும் அதிரடி புத்தாண்டுப் பரிசு**

www.globalvillage-lanka.com

EXCELLENT COMPUTER EDUCATION @ AFFORDABLE PRICE

இன்று முதல்

தமிழ் நாட்டில் மட்டும் 142 கிளைகளைக் கொண்ட சர்வதேச தரமிக்க முன்னணிக் கணனிக் கல்வித் தளமான

GLOBAL VILLAGE COMPUTER EDUCATION
(A unit of Global Media Tech.)
நிறுவனத்தின்

500 மாணவருக்கு முதல் 50% OFF!!!

கற்கை நெறிகளையும் சர்வதேச தரமிக்க சான்றிதழ்களையும் யாழ் மண்ணிலேயே பெற முடியும் !!

GV

COURSES OFFERED

PROFESSIONAL COURSES
OAC • DTP • DCA • HWE • ECOM

PROGRAMMING COURSES
VB • C/C++ • JAVA

MULTIMEDIA COURSES
FLASH • MAYA • 3DS MAX • PREMIERE • DREAMWEAVER • DIRECTOR

ACCOUNTING COURSES
TALLY

KIDS COURSES
STAGE 1 • STAGE2

FREE Study Materials

APPROVED TRAINING CENTER
GLOBAL VILLAGE COMPUTER EDUCATION
(A unit of Sovereign Infotech India (Pvt) Ltd)
ICM IMIS

தொடர்புகட்கு : (New District Franchise)
GLOBAL VILLAGE COMPUTER EDUCATION
உடுவில் வீதி, மருதனார்மடம்,
யாழ்ப்பாணம்.
T.P. : 021-4590222

ISLANDWIDE FRANCHISES
JAFFNA — MANNAR
TRINCOMALEE — CHENKALADY
VAVUNIYA — WATTALA

REGIONAL OFFICE
183, NEW CHETTY STREET,
COLOMBO 13.
011-4615202

CORPORATE HEAD OFFICE
116, SEA STREET,
NEGOMBO.
031-2235955,2238645

WE DO NOT HAVE ANY OTHER FRANCHISES IN JAFFNA DISTRICT

# கொழும்பில் நேற்றுமட்டும் விபத்துகளில் 230 பேர்காயம்

கொழும்பு,ஏப்.15

நேற்றுமுன்தினம் இரவு புத்தாண்டு பிறந்த திலிருந்து 24 மணித்தியாலத்தில் கொழும்பின் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்ற விபத்துச் சம்பவங்களில் காயமடைந்த 230 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இம் முறை குறைந்தளவினரே இவ்வாறு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர் என அவசர சிகிச்சைப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இவர்களில் 70 பேர் வைத்தியசாலை வார்ட்டுகளில்தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர். வீதி விபத்துகளிலேயே அதிகமானோர் காயமடைந்திருக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (த)

# திரைப்படத்துக்கு ஆங்கிலப் பெயர்; எதிர்த்து சென்னையில் ஆர்ப்பாட்டம்

## 'மும்பை எக்ஸ்பிரஸ்' தடைப்பட்டது

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விடுதலைச் சிறுத்தைகள் அணியின் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டபோது...



சென்னை,ஏப்.15

நடிகர் கமலஹாசன் நடித்த 'மும்பை எக்ஸ்பிரஸ்' படம் நேற்று வெளியாகியது. இந்தப் படத்தின் பெயர் ஆங்கிலத்தில் இருப்பதால் தமிழில் பெயர் மாற்றக்கோரி பா.ம.க. மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினர் ஏற்கனவே, கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால், படத்தின் தலைப்பை மாற்றமுடியாது என கமலஹாசன் அறிவித்திருந்தார்.

சென்னை புரசைவாக்கத்தில் 'மும்பை எக்ஸ்பிரஸ்' படம் திரையிடப்பட்டுள்ள அபிராமி முன் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினர் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தமிழ் மொழியையும், தமிழ்மரபுகளையும் இழிவுபடுத்தும் திரைப்படங்களை புறக்கணிப்போம் என்ற வாசகங்கள் அடங்கிய அட்டைகளை கையில் பிடித்துக்கொண்டு ஆர்ப்பாட்டகாரர்கள் திரையரங்கை முற்றுகையிட்டனர்.

திடீரென்று அவர்கள் கோஷம் எழும்பியவாறே தியேட்டருக்குள் நுழைய முயன்றனர். உடனே அங்கு இருந்த பொலீஸார் அவர்களை தடுத்து நிறுத்திக் கைதுசெய்தனர்.

விடுதலைச் சிறுத்தைகள் மாநில துணைச்செயலாளர் திருமாறன் தலைமையில் 40 பேர் கைதானார்கள். அவர்களை பொலீஸார் அயனாவரம் கல்யாண மண்டபத்துக்குக் கொண்டுசென்றனர்.

அதன் பிறகு மற்றொரு பிரிவினர் வந்து மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், மேலும் 20 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

நங்கநல்லூரில் வேலன் திரையரங்கு முன்பாக ஆர்பாட்டம் செய்த விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைச் சேர்ந்த 10 கைதுசெய்யப்பட்டனர்.

'மும்மை எக்ஸ்பிரஸ்' படத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பதாகை கிழிப்பு, திரை கிழிப்பு சம்பவங்கள் நடந்தன. பல திரையரங்குகளில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினரின் எச்சரிக்கையை அடுத்து 'மும்பை எஸ்பிரஸ்' படம் திரையிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (கு)

# திருமறைக்கலாமன்ற சிறுவர் பாசறை

குருநகர்,ஏப்.15

சுனாமி கடலலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளான குடத்தனை, மணற்காடு பகுதிகளைச்சேர்ந்த சிறுவர்கள் கலந்து கொள்ளும் சமாதானத்துக்கான மூன்றுநாள் பாசறை இன்று தொடக்கம் எதிர்வரும் 17ஆம் திகதி வரை கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இச் சிறுவர் பாசறை நடைபெறவுள்ளது. (கு-51)

## சேது சமுத்திரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்குத் தெளிவாக விளக்கியிருக்கின்றோம்.

பெரும்பாலும் இன்னமும் ஓரிரு வாரங்களில் இந்திய மத்திய அரசிடம் இருந்து இதற்கான அனுமதி கிடைத்துவிடும். அதன்பின்னர் உடனடியாகவே அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார் அவர். (த)

## சொல் ஹெய்ம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றனர் எனவும் -

சர்வதேச நாடுகளில் தங்கள் நிலைப்பாட்டைத் தெரிவுபடுத்திவிட்டு தாயகம் திரும்புகின்ற புலிகளின் அரசியல் விவகாரக்குழுவுக்குத் தலைமை வகித்த சு.ப.தமிழ்ச்செல்வன் நோர்வே ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மைச் சந்திக்கும் போது விடுதலைப் புலிகளின் இறுக்கமான நிலைப்பாடுகள் தெரியவரும் எனவும் -

எதிர்பார்க்கப்படுகின்றது.

திங்களன்று கொழும்புக்கு வரவுள்ள எரிக் சொல்ஹெய்ம் அன்று மட்டக்களப்புக்கும் விஜயம் செய்து கிழக்கு நிலைவரங்கள் தொடர்பாக பல தரப்பினருடனும் கலந்துரையாடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## பதிவாளரின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவுசெய்த மாணவர்கள் தமது பரீட்சைப் பெறுபேறுபற்றிப் பதிவாளரால் வழங்கப்பட்ட அறிக்கையைப் பெற்றுள்ளனர்.

எனினும், பட்டமளிப்புவிழா நடைபெறாததால் சம்பந்தபட்ட மாணவர்கள் பட்டச் சான்றிதழைப் பெற்றிருக்க வாய்ப்பு இல்லை என்று யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேரா சிரியர் இரா.சிவச்சந்திரன். தம்முடன் பேச்சு நடத்தினார் என்றும் -

இதனையடுத்து, விண்ணப்ப முடிவுத் திகதியை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதற்கும், பரீட்சைப் பெறுபேறுபற்றிய பதிவாளரின் அறிக்கையுடன் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது என்றும் - பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (எ)

## யாழ்.நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞன் ஒலிப்பதிவு கூடத்தினுள் ஒடிமறைந்தார் என்றும் -

துரத்திவந்த கும்பல் ஒலிப்பதிவு கூடத்தினுள் நுழைந்து அந்த இளைஞனைத் தாக்கியதுடன் அங்கிருந்த பொருள்களையும் அடித்து நொறுக்கியது என்றும் -

கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்திலும் விடுதலைப் புலிகளின் யாழ். நல்லூர் கோட்ட அரசியல்துறை அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (ஐ-7)

## அரச உதவி கிடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச நிவாரணங்களோ, அரசசார்பற்ற அமைப்புகளின் நிவாரணங்களோ தமக்குக் கிடைக்கவில்லை என்றும் மக்கள் முறையிட்டனர். இந்த விஜயத்தின் போது எதிர்கட்சித் தலைவர் எடுத்துச்சென்ற பெருமளவு உணவுப் பொருள்கள் அங்குள்ள மக்களுக்கு வழங்கப்பட்டன. (ஐ-3)

## அதிரடிப்படைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படி மக்கள் கோரினர்.

விசாரணைக்குழு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பதாக கிழக்குக்கான சிரேஷ்ட அதிகாரி நெவில் ஜெயசிங்க உறுதி அளித்ததையடுத்து மக்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

இந்த விபத்துச் சம்பவத்தால் அந்தப்பகுதியில் நேற்று புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் சோபை இழந்தன. (ஐ-3)

## புத்தாண்டு சோபிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகரப்பகுதியில் பட்டாசு வெடிச்சத்தங்கள் ஆங்காங்கே கேட்ட வண்ணம் இருந்தன.

எனினும் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கரையோரப்பகுதிகள் நேற்று சோபை இழந்து காணப்பட்டது.

அனர்த்தத்தில் தமது உறவுகளைப் பறிகொடுத்தவர்கள் நேற்று முழுவதும் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டனர் என்று எமது பிரதேசச் செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

குறிப்பாக சிறுவர்களைப் பறிகொடுத்த உறவுகள் கதறிக் கண்ணீர் விட்டு அழுதனர்.

இதேவேளை -

சுனாமியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் உட்பட வடக்கு - கிழக்கின் பெரும்பாலான பகுதிகளில் புதுவருடக் கொண்டாட்டங்கள் சோபிக்கவில்லை என்று அங்குள்ள எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் ஆண்டாக - அனர்த்தங்கள், அழிவுகள் ஏதுமற்ற ஆண்டாக பார்த்திப வருடம் இருக்க வேண்டும் என்பதே நேற்யைதினம் மக்களின் பொதுவான பிரார்த்தனையாக அமைந்திருந்தது. (கு-15)

# மரண அறிவித்தல்கள்

## சின்னராசா பாலசுப்பிரமணியம்

(பாலா எலக்ரோ பிளேற்றிங்)



வண்ணார்பண்ணை, பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சி.பாலசுப்பிரமணியம் 12.04.2005 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.04.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*391, K.K.S. Road,*
*Jaffna.*
*(44246)(17-34-33)*
தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி விஜயரட்ணம் சீதாலட்சுமி



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்தவருமான திருமதி விஜயரட்ணம் சீதாலட்சுமி நேற்று (14.04.2005) வியாழக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு திருமதி கந்தசாமி-சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும் விஜயரட்ணத்தின் (T.V) அன்பு மனைவியும் ரவிகரன் (ஜேர்மனி), திருமகள் (லண்டன்), கிருபாகரன் (வட்டக்கச்சி), விஜி (லண்டன்), கௌரி (இந்தியா), பிரபு (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரவீந்திரகுமார் (லண்டன்), சசித்தா (வட்டக்கச்சி), நவபாரதி (லண்டன்), சத்தியசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் டிலக்ஷன், பிரவீன், திவ்யா, மகிழினி, அர்ச்சயா, காவியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஸ்ரீ ரங்கநாதன், ஆனந்தலட்சுமி, பத்மநாதன், காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2005) வெள்ளிக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
*(44247)(17-34-33)*
தகவல்:
கிருபாகரன்
(மகன்).


## நிரு ரியூசன் சென்ரர்

A/L 2007 கோண்டாவில்.

கலை, வர்த்தக, கணித
புதிய பிரிவுகள்
ஆரம்பம்:- 16.04.2005
சனி 7மணி. *(44162)(17-34-33)*

## பொருளியற் கல்லூரி

(யாழ். கிளை நிறுவனம்)
கே.கே.எஸ். றோட் - இணுவில்.

அன்று யாழ். நகரில், பின்பு வன்னிப் பெருநிலப்பரப்பில் பல வருடங்களின் பின் மீண்டும் யாழ். மண்ணில்

பொருளியல்
திரு. மகேந்திரன்
A/L 2006
சனி - ஞாயிறு
★ பேரினப் பொருளாதாரம்
★ பகுதி II - பணம், வங்கி, விலைமட்டம்
A/L 2005 மீட்டல் – Paper Class
A/L 2007 பொருளியல் அறிமுகம்
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
*(44193)(17-34-33)*


# கண்ணீர் அஞ்சலி



## கந்தையா திருநாவுக்கரசு

(அராலி கிழக்கு)

*சங்கரியார் வளவினது கட்டடக் கலைஞரின் கைகள் ஓய்ந்து கிடக்கின்றன.*

*'சங்கரியார் வளவு',*
*718, கே.கே.எஸ் வீதி,*
*சிவலிங்கப்புளியடி,*
*யாழ்ப்பாணம்.* *(சி-42319)(17-34-33)*
P.K.B. பாலஸங்கர்
குடும்பம்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## சீனியன் தில்லையம்பலம்

(தில்லையன்)

மலர்வு 19.03.1933

உதிர்வு 16.03.2005

திதி: 15.04.2005

*இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.*

கட்டுப்பிலா,
வல்வெட்டி. *(சி-42317)(17-34-33)*
குடும்பத்தினர்.




EXPOAIR எக்ஸ்போ ஏயார்

your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.